Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு: *07-04-2014* Issued: 07-04-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, அக்டோபர் 25, 2013—தொகுதி 56—எண் 3**

**Friday the 25th October, 2013—Volume 56—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**25–10–2013**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 105-107 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 171-173 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| மின்வெட்டால் விவசாயிகள், சிறு, குறு தொழில்முனைவோர் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு— | 173-187 |
| செல்வி கே. பாலபாரதி | 174-175 |
| திரு. எம். ஆறுமுகம் | 175-176 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 176-187 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 188 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, 2013 | 188-189 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 188, 189 |
| (ஆ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2013 | 189 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 189 |
| **6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2013–2014, அளித்தல்—** | 190-199 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 190-195 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 199-201 |


***

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, ஐப்பசி 8, திருவள்ளுவர் ஆண்டு–2044

## 2013 அக்டோபர் 25, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

### சொந்தக் கட்டடம்

***19148–திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திருத்துறைப்பூண்டியில் மின்வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் காலியிடம் ஏதும் இல்லாததால் அங்குள்ள உதவி செயற் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் அலுவலகங்கள், நுகர்வோருக்கு எவ்வித சிரமுமின்றி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாரியத்தின் நிதிநிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரிலுள்ள மின் துறை அலுவலகம், வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தைச் சார்ந்த வேளூர், பாமணி, தலைக்காடு, கட்டிமேடு, ஆதிரெங்கம், நெடுங்குளம், கொக்கலாடி, கொருக்கை ஆகிய ஊராட்சிகளும், அதேபோல, வேதாரண்யம் தொகுதியைச் சார்ந்த துளசியாபுரம், நீர்முலை ஆகிய ஊராட்சிகளும், பிராந்தகரை, மூலகரை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்தவர்களும், அதேபோல, முத்துப்பேட்டையைச் சார்ந்த நெகும்பலம், கீழப்பெருமலை, மேலப் பெருமலை, கள்ளுக்குடி, சங்கேந்தி, உதயமார்த்தாண்டபுரம், விளாங்காடு, நாச்சிகுளம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்தவர்களும் 25,000 மின் இணைப்புகளைக் கொண்டு அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, இம்மாதிரி அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறபோது, வாடகை உரிமையாளர்கள், ஒவ்வோராண்டும் கட்டடம் தேவையென்று சொல்கிறபோது, அலுவலகம் இடம் மாறிச் செல்கிற நேரத்தில் மின் கட்டணத்தைக் கட்டுகிறவர்கள் மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் நகராட்சி எல்லைக்குள் இல்லை. ஆனால், அங்கே இருக்கின்ற அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கினாலும்கூட, அது நகராட்சி எல்லைக்குள்ளேயே இயங்கி வருகிறது. அங்கே இருக்கின்ற செயற் பொறியாளர், இள மின் பொறியாளர் மற்றும் நகர்ப்புற இள மின் பொறியாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கினாலும்கூட, அதனால் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இல்லை. ஆனால், வாடகை கொடுக்கின்ற பளுதான் மின்சார வாரியத்திற்கு இருக்கின்றதே தவிர, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக, இன்றைக்கு திருத்துறைப்பூண்டியிலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளன்கோவில் என்கிற இடத்திலேதான் 110/33/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. ஆகவே, அங்கே இந்த அலுவலகத்தைக் கட்டினால், பொதுமக்களுக்கு 6 கி.மீ. தூரம் செல்வது சிரமமாக இருக்கும். ஆகவேதான், இப்போது இருக்கிற இடத்திலேயே இயக்குவதிலே எவ்வித சிரமமும் இல்லை. இருந்தாலும்கூட, வருங்காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மின்சார வாரியத்தின் நிதிநிலைக்கேற்ப, அங்கே தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கட்டடம் கட்டுவதற்கு 7,500 சதுர அடி நிலம் தேவை. அதேபோல, அதற்கு ஏறத்தாழ 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, தகுந்த இடம் கண்டறியப்பட்டால், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைபற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

முற்பகல் 10–05

**திரு. கே. உலகநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இயங்கி கொண்டிருக்கிற அந்த வாடகைக் கட்டடத்தைக்கூட இந்த மாதம் காலி செய்ய வேண்டுமென்று

உரிமையாளர் சொல்லியிருக்கிறார். இப்பொழுது இருக்கக்கூடிய அந்த அலுவலகத்திற்கு மாதம் பத்தாயிரம் ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது புதிதாக மாறக்கூடிய அந்தக் கட்டடத்திற்குப் பதினான்காயிரம் ரூபாய் வாடகை கேட்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இடத்தை தானமாகத் தந்தால், அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தானமாகக் கொடுத்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தயாராக இருக்கிறது. ஆனால், அது மக்களுக்குப் பயனுள்ள இடத்திலே, நகர்ப்புறப் பகுதிக்குள்ளே, நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலே இருந்தால் மக்களுக்கு இன்னும் வசதியாக இருக்கும். வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அலுவலகத்தின் கட்டட உரிமையாளர் அதைக் காலி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்று சொன்னார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும்வரை அவரிடம் பேசி, அதற்குரிய அவகாசம் கேட்டு அதைக் காலி செய்யாமல், வரை அந்தக் கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் இடம் தானமாக வந்தால் உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் வல்ல எங்கள் குடும்ப தெய்வம், இதய தெய்வம் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய சீர்காழி தொகுதிக்குட்பட்ட செயற் பொறியாளர் அலுவலகமும் மற்றும் உதவிப் பொறியாளர் பகுதி அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு மின்சாரத் துறை





அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் மட்டுமல்ல, தமிழகத்தின் எந்தப் பகுதியானாலும், அந்தப் பகுதியிலே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அலுவலகங்களைப் படிப்படியாக சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய கருத்துரு ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் படிப்படியாக நிதிநிலைக்கேற்ப சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற மின்சாரத் துறையைச் சேர்ந்த அலுவலகங்களுக்குப் படிப்படியாக நிதிநிலைக்கேற்ப சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின்சார வாரியத்தின் கட்டடத்திற்கு அருகில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஊரணி என்ற ஒரு இடம் இருக்கின்றது. எந்தப் பயன்பாடும் இல்லாத அந்த இடத்தில் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒட்டுமொத்தமாக நான் சொல்லியிருக்கின்றேன். தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் வாடகைக் கட்டடத்திலே இருக்கின்ற அனைத்து

அலுவலகங்களுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டுகின்ற பணி நடைபெறும்போது சோழவந்தான் தொகுதியிலும் அதற்குள்ள இடத்திலே முன்னுரிமை கொடுத்து கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**17—**

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

*__23068—திரு. இரா. இராஜேந்திரன்:__

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடி மற்றும் வடலூர் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்கு ரூ.33.50 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் வடலூர் பேரூராட்சிக்கு ரூ.85.87 கோடி மதிப்பீட்டிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பாதாளச் சாக்கடைக்கான சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கத் தேவையான இடங்களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன் குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்டிருக்கிற குறிஞ்சிப்பாடி மற்றும் வடலூர் பேரூராட்சிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரைவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திட்டம் துவக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது சிதம்பரம் நகராட்சிக்குப் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக நிதியொதுக்கீடு செய்து, அந்தப் பணி தொடங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. அதற்கான டெண்டர் விடப்பட்டு, எப்போது அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதை ஆய்வு செய்து, திட்டப் பணி நடவடிக்கையில் உள்ளது. விரைவாக அதற்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

[2013 அக்டோபர் 25

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடிந்த வரை முயற்சிப்பது முயற்சி அல்ல, முடியும் வரை முயற்சி' என்பதை உலகத்திற்கு உணர்த்திய உன்னதத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்திட்ட சாதனைகள் ஒன்றா, இரண்டா? எண்ணிலடக்க; வரி உண்டோ வார்த்தைகளில் அடக்க; அன்றி இடமுண்டோ ஏட்டிலடக்க; தாயே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தக்கோலம் பேரூராட்சியில் சுமார் 15,000 மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்தப் பேரூராட்சி சென்னைக்கு மிக அருகில் இருக்கின்ற வளர்ந்துவரும் பேரூராட்சியாகும். அங்கிருக்கிற பிரசித்திபெற்ற அருள்மிகு ஜலநாதீஸ்வரர் ஆலயத்திற்கு நாள்தோறும் அதிகமான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். இப்பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு அனைத்து சூழல்களும் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வருகின்ற நிதியாண்டில் தக்கோலம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கிணங்க அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக மட்டும் ரூ.22 ஆயிரம் கோடி தேவைப்படுகிறது. அதனடிப்படையிலே இந்தப் பேரூராட்சிக்கு முன்னுரிமை கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. கும்பகோணம் நகரின் ஆரம்பப் பகுதியாக தாராசுரம் பேரூராட்சியும், முடிவில் திருநாகேஸ்வரம் பேரூராட்சியும் தலா 27,000 மக்கள்தொகை கொண்டவையாகும். இந்த இரண்டு பேரூராட்சிகளும் கோவில் நகரங்களாகவும், வளர்ந்துவரும் பகுதிகளாகவும் விளங்குகின்றன. வரவிருக்கிற கும்பகோணம் மகாமக விழாவிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தாராசுரம் மற்றும் திருநாகேஸ்வரம் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புவதோடு, குறிப்பாக தாராசுரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழக அரசைக் கேட்டுக்கொள்ள நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண் 52 எண். 15–7–2012 அன்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்ட நிலையில், அதற்கும் ஒப்புதல் அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இரண்டு பேரூராட்சிகளுக்கும் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி திட்டம் தயாரிக்கப் பட்டிருந்தாலும்கூட, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைத்து அங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குரிய இடங்கள் கிடைப்பதில்லை. பேரூராட்சியானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, அதற்குரிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அதற்குப் பின்புதான் முழுமையாக திட்டம் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இடங்களை ஆய்வு செய்யும் பணி முடிவுற்றவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கும்பட்சத்தில், அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எவ்வளவு காலமாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ள 28 பேரூராட்சிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேரூராட்சியும் இணைக்கப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவாக அங்கு திட்டப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

*முற்பகல் 10–15*

**திரு. எஸ். செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதி, அவல்பட்டு ஊராட்சி, அண்ணா நகர் பகுதி, 1984–ல் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு நவீனக் குடியிருப்புப் பகுதியாகும். அங்கு பாதாளச் சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டு, கழிவுநீர் தேங்கி, வெளியேறாமல் வீடுகளின் உள்ளேயே தேங்கி நிற்கிறது என கடந்த ஆண்டு கூட்டத் தொடரிலேயே தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். தற்போது மழைக் காலம் என்பதால், போர்க்கால அடிப்படையில் பாதாளச் சாக்கடையைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை விரைவாகப் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் தாமரைக்குளம், தென்கரை கல்லுப்பட்டி, வடுகப்பட்டி ஆகிய இந்த மூன்று பேரூராட்சிகளும் அருகருகில் அமைந்திருக்கக்கூடிய பேரூராட்சிகளாகும். தென்கரையும், தாமரைக்குளமும் ஒன்றோடு ஒன்று இணைந்த பேரூராட்சிகளாகும். இந்த மூன்று பேரூராட்சிகளையும் இணைத்து, ஒரு பொது பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை உருவாக்கிட நடவடிக்கை எடுத்தால் அரசுக்கு செலவும் குறையும்; அதற்கான சுத்திகரிப்பு நிலையத்தை ஒரே இடத்தில் அமைப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது என்கிற நிலையில், அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே கடிதமும் அனுப்பியிருக்கிறேன். அதுகுறித்து பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதுபோன்ற அமைப்புரீதியாக உள்ள பேரூராட்சிகளை ஒன்றிணைத்து இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. சுத்திகரிப்பு நிலையமும், உந்து நிலையமும் கட்டுவதற்குத் தேவையான இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. எந்த இடத்திற்காவது போய் அதற்கான உந்து

[2013 அக்டோபர் 25

நிலையத்தையும், சுத்திகரிப்பு நிலையத்தையும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலும்கூட, பக்கத்திலே வாழ்கின்றவர்கள் உடனடியாக ஆட்சேபணை தெரிவிக்கின்றார்கள்; நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள் அல்லது வேறு வகையான முறையில், மறியல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் இந்த மூன்று பேரூராட்சிகளையும் ஒன்றிணைத்து, பொதுவான ஒரு இடத்தை அடையாளம் கண்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்று ஆட்சி நடத்துபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்; இன்றைக்கு தமிழகத்தில் நல்லரசு; நாளைய பாரதத்தில் வல்லரசு என மாற்றவிருக்கும், நித்தம் நாம் வணங்கும் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பூந்தமல்லி நகராட்சியின் சேர்மன் என்கிற காரணத்தினால், அப்போதிருந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினர், ஆவடி நகராட்சிக்கு இத்திட்டத்தை மாற்றம் செய்துவிட்டனர். ஆனால், 'மக்களுக்காகத்தான் திட்டம்; திட்டத்திற்காக மக்கள் இல்லை' என ஆட்சி நடத்துபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பூந்தமல்லி நகராட்சியையொட்டியுள்ள காட்டுப்பாக்கம், சென்னீர்குப்பம், வரதராஜபுரம், நசரத்பேட்டை, தாங்கல், அகரம் மில் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய மொத்த மக்கள் தொகை இரண்டு இலட்சம் ஆகும். அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு ஏற்கெனவே விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப அந்தப் பணியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆய்வு செய்து கொண்டுவரப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கான வேலைகள் நடைபெற்றன. செங்கல்பட்டு நகராட்சியில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு புள்ளேரி கிராமத்தில் இடத்தைத் தேர்வு செய்து, அதற்காக மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் என்.ஓ.சி. பெறப்பட்டுள்ளது. புள்ளேரி கிராமத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கூடாது என்று அந்தக் கிராமத்தைச் சார்ந்தவர் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதற்குப் பிறகும் நில மாற்ற உத்தரவை அரசு வழங்கவில்லை. செங்கல்பட்டு நகராட்சி பழமையான நகராட்சியாகும். அந்த நகராட்சியில் கால்வாய் வசதி சரியாக இல்லை. அதனால் சாக்கடை நீர் சாலையில் ஓடுகின்ற அவல நிலை உள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நில மாற்ற உத்தரவை உடனடியாக வழங்கி, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல, சுத்திகரிப்பு நிலையங்கள் எங்கெல்லாம் அமைக்கப்படவேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுக்கின்றதோ அல்லது நகராட்சியோ,

[2013 அக்டோபர் 25

மாநகராட்சியோ நடவடிக்கை எடுக்கிறதோ,—இத்தனைக்கும் அந்த நிலங்கள் தனியாருக்குச் சொந்தமான நிலங்கள்கூட அல்ல— அரசுக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கும். அந்த நிலங்களை கையகப்படுத்தி, அங்கு பணிகள் தொடங்கப்படுகின்ற நேரத்திலே, பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி, அந்தப் பகுதிகளிலே வாழ்கின்றவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வது அல்லது மறியலில் ஈடுபடுவது அல்லது செய்கின்ற பணியைத் தடுத்து நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். இதுபோன்ற சுத்திகரிப்பு நிலையங்களை முழுவதுமாக நல்ல முறையில் உருவாக்கி, அதற்கு அருகில் இருக்கின்ற இல்லங்களுக்குக்கூட அந்த வாசனை போகாமல் சுத்தமாக இருக்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் இடமாற்றம் செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி நகராட்சிகளே இல்லாத ஒரு தொகுதி. அங்கு ஐந்து பேரூராட்சிகளும், நூற்றுக்கணக்கான ஊராட்சிகளும் உள்ளடங்கியிருக்கின்றன. திருவிடைமருதூர் தொகுதியில் பேரூராட்சிகளாக இருக்கக்கூடிய திருவிடைமருதூர், திருபுவனம், ஆடுதுறை. வேப்பத்தூர் ஆகியவை ஒட்டிய பகுதிகளாக, ஒரு நகராட்சிக்கு நிகரான, ஆனால் நான்கு பேரூராட்சிகளாக இருக்கின்றன. அதை ஒட்டி ஆவணியாபுரம், வண்ணக்குடி போன்ற ஊராட்சிகளும் இருக்கின்றன. எனவே, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்துவதைப்போல, அங்கு ஒருங்கிணைந்த திட்டமாக பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் சுத்திகரிப்பு நிலையத்தையும் உருவாக்கி, என்னுடைய தொகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக ஊராட்சிகளுக்கும் அமல்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நல்ல நயத்தோடு பேசுகிறார். நயத்தோடு பேசுகின்ற அதே நேரத்தில் நடவடிக்கை எடுக்க எது எது சாத்தியப்படுமோ அதைத்தான் கேட்கவேண்டும். இப்பொழுது நிறைய நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலுமே பணிகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தத் தொகுதியில் நகராட்சிகள் இல்லை, பேரூராட்சிகள் மட்டும் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கின்றார். அந்தப் பேரூராட்சிகளில் முழுவதுமாக விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் முதலில் பேரூராட்சிகளிலே நிறைவு செய்வோம். அதற்கு அடுத்தபடியாக தங்கள் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடம் நல்ல நிலையில் இருப்பதாக மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். அந்தத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியிலேயே இருந்துகொண்டிருக்கிறார். அந்தத் திட்டம் தயார் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. எனவே, விரைவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமலுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**18—**

## இலைப்புள்ளி நோய்

***32822—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேனி மாவட்டத்தில் வாழைத் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள இலைப்புள்ளி நோயைக் (காஞ்சாரை நோய்) கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மாவட்டத்தில் வாழைத் தோட்டங்களில் பொதுவாக அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதங்களுக்கிடையே காஞ்சாரை நோய் எனப்படும் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைகள், தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்குக்கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில், சின்னமனூர் ஒன்றியத்தில் 1,716 ஹெக்டரிலும், உத்தமபாளையம் ஒன்றியத்தில் 781 ஹெக்டரிலும், கம்பம் ஒன்றியத்தில் 707 ஹெக்டரிலும், ஆக மொத்தம் 3,204 ஹெக்டரில் வாழை பயிரிடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு* Sigatoka *என்ற இலைப்புள்ளி காஞ்சாரை நோய் தாக்கப்பட்டதனால் அப்பகுதி வாழை விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கும், கஷ்டத்திற்கும், பொருளாதார இழப்பிற்கும் ஆளானார்கள். இந்த ஆண்டு அக்டோபர் மாதம் மழைக்காலம், அதையடுத்து பனிக் காலம் என்பதால், நிலத்தில் ஈரப்பதம் அதிகரிக்கின்றபோதும், காற்றில் ஈரப் பதம்*–relative humidity *அதிகரிக்கின்றபோதும், இந்த நோய் மிகத் தீவிரமாகப் பரவுகிறது.* Spreading fastly. *இந்த நோய்க்கு* Mycosphaerella figensis *என்பதுதான் மூல காரணியாக இருக்கின்றது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை இந்த நோய் தீவிரமாகப் பரவக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*





*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழை உற்பத்தியிலே தேசிய அளவில் தேனி மாவட்டம்தான் முன்னோடியாக இருக்கின்றது. தேனி மாவட்டத்தில் சுமார் 5,965 ஹெக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதில் 2,800 ஹெக்டேரில் “ரொபஸ்டாவும்”, 3,165 ஹெக்டேரில் “கிராண்ட் நைன்” திசு வாழையும் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 2012–2013 ஆம் ஆண்டு தேனி மாவட்டத்தில், சுமார் 642 ஹெக்டேர் வாழைப் பயிர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டது. அப்போது விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி, கம்பம், உத்தமபாளையம், பெரியகுளம், போடி மற்றும் சின்னமனூர் ஆகிய இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், கிராம, வட்டார, மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கூட்டங்களில் இந்நோய் குறித்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உரிய பரிந்துரைகளும், வழிமுறைகளும் வழங்கப்பட்டதால், நோய் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டது. எனவே, இனி வரும் காலங்களிலும் காஞ்சாரை நோய் தாக்குதல் தொடர்பாக தோட்டக்கலை துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் சேர்ந்து பல்வேறு நோய் கட்டுப்பாடு சிறப்பு முகாம்களை நடத்தி, இந்த நோயினைத் தடுத்திட தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால், இந்த நோய் நடப்பு ஆண்டில் பொருளாதாரச் சேத நிலையைக்*

[2013 அக்டோபர் 25

கடக்காது, கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மழைக் காலமும், பனிக் காலமும் சேர்ந்து வருகின்ற காரணத்தினால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விவசாயிகளுக்கு* Trichoderma viride *மற்றும்* Pseudomonas *என்கின்ற* Bio–Agent–*களையும், நோய் அறிகுறி தென்பட்டால்* Copper Oxychloride, Bavistin, Tilt, Preventor *பூஞ்சை காளான் போன்ற மருந்துகளையும் இலவசமாகத் தந்து உதவவேண்டும். தேனி மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியில், ஒடைப்பட்டி கிராமத்தில் 2 ஏக்கர் நிலத்தில் திராட்சை சேமிப்பு குளிர்பதன கிட்டங்கி கட்டப்பட்டது. அது இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. அதையும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோயின் தாக்குதல் பல வழிகளில் இருக்கிறது. குறிப்பாக களைகள் அதிகமாக இருந்தால், இந்த நோய் தாக்குதல் ஏற்படும். வடிகால் வசதி இல்லாமல் இருந்தாலும்கூட இந்த நோய் தாக்குதல் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, வெப்ப நிலை 23 டிகிரி முதல் 25 டிகிரி சென்டிகிரேடாகவும், காற்றின் ஈரப்பதம் 40%–க்கு மேலாக இருப்பதும் இந்த நோயின் தாக்குதலுக்கு காரணமாக அமைகிறது. மழை மற்றும் பனிக் காலங்களில் இந்த நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும். அதனால், இந்தத் தாக்குதலுக்கு ஒரு காரணம் என்று இல்லை. பல காரணங்கள் இருக்கின்றன. எனவே, நம்முடைய துறை அலுவலர்களையும், வேளாண் விஞ்ஞானிகளையும் அனுப்பி, இந்நோயை உடனடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டு அந்த நோய் தாக்குதல் அதிகமாக இருப்பின், அதற்கான உதவிகள் அனைத்தும் செய்யப்படும் என்பதையும்*



2013 அக்டோபர் 25]

*மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் செவ்வாழை, நேந்திரன், மட்டி போன்ற அரிய வகை வாழைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வகைகள் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. இந்த வாழையில், குறிப்பாக சில வகை நோய்கள் தென்படுகின்றன. இதனுடைய* samples–*ஐ நாங்கள் ஆய்வு செய்வதற்காக திருச்சிக்குத்தான் எடுத்துச் செல்லவேண்டி இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலேயே வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கப்பட்டால், அந்த வாழை விவசாயிகளுக்கு அருகிலேயே ஒரு தீர்வு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. தோட்டக்கலை மையத்தில் இதற்குண்டான வசதிகள் இல்லை. ஆகையால், இதற்கென்று தனியாக ஒரு வாழை ஆராய்ச்சி மையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அரசை தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் இருப்பதால், அந்த ஆராய்ச்சி மையங்களை கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம். எனினும், அதற்கான அவசியம், தேவை இருப்பின், பிற்காலத்தில் அதுபற்றிப் பரிசீலக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 அக்டோபர் 25

**19—**

## சொந்தக் கட்டடம்

*4577—**திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ. பச்சுடையாம்பாளையம் ஒடுவன்குறிச்சி–1 மற்றும் 2 நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ.பச்சுடையாம் பாளையம் ஒடுவன்குறிச்சி 1 மற்றும் ஒடுவன்குறிச்சி 2 ஆகிய நியாய விலைக் கடைகளை நடத்தும் ஓ.ஜேடர்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான அடிமனை மற்றும் நிதி வசதி ஏதும் இல்லாததால் இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உதகமண்டலத்தில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அவர்களது பண்பாட்டினைப் பாதுகாக்கும் வகையிலும் பழங்குடி மக்களின் கலாச்சாரத்தினை உலகமறியச் செய்யும் வகையிலும் அரசாங்கம் சார்ந்த அமைப்பு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, பழங்குடி மக்கள்மீது தனிக் கவனம் செலுத்தி நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பண்பாட்டு ஆதார மையம் ஒன்றினை அமைக்க ரூபாய் 10 கோடியே 12 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள், மேலும், எனது தொகுதியான சேந்தமங்கலத்தில் ஒரு பேருந்து நிலையமும், எருமப்பட்டியில் ஒரு பேருந்து நிலையமும் மற்றும் தொகுதி மக்களின் சாலை மேம்பாட்டு வசதிக்காக ரூபாய் 20 கோடியையும் ஒதுக்கிக் கொடுத்த புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் பழங்குடி மக்களின் நெஞ்சில் வாழும் அன்புப் பூஞ்சோலை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறிக்கொள்கிறேன். எனது சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஓ.பச்சுடையாம் பாளையம் ஒடுவன்குறிச்சியிலுள்ள 1–வது நியாய விலைக் கடை 570 கார்டுகளும், 2–வது நியாய விலைக் கடை 630 கார்டுகளும் கொண்டு சுமார் 18 வருடங்களாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. இந்தத் தொகுதி பழங்குடியினர் வசிக்கக்கூடிய மிகவும் பின்தங்கிய தொகுதி. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆதரவோடு இந்தத் தொகுதியின்மேல் தனிக் கவனம் செலுத்தி இந்த ஒடுவன்குறிச்சி கிராமத்திலுள்ள 1 மற்றும் 2 ஆகிய நியாய விலைக் கடைகளுக்கு அரசாங்கத்தின்மூலமாக சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூறிக் கொண்டு, தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 648 நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் 27 புதிய நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்புக்குரிய மாண்புமிகு

உறுப்பினர் சகோதரியினுடைய தொகுதியில் மேற்கண்ட கடைகளுக்கான இட வசதியைக் கொடுக்க நம்முடைய நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு மாவட்ட இணைப் பதிவாளர்மூலம் 15–10–2012–லேயே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அது விரைவாக பரிசீலிக்கப்பட்டு, இடம் கிடைக்கும்பட்சத்தில் மாவட்ட பொது நிதியிலிருந்தோ, ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ விரைவில் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானு கோடி நன்றியினைத் தொகுதி மக்களின் சார்பாகச் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

*முற்பகல் 10–35*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுடைய எண்ணங்களை ஈடுசெய்யக்கூடிய வகையில், தமிழகத்தில் ஆட்சிசெய்து கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னவாகைக்குளம், பெரியவாகைக்குளம், சுங்கராம்பட்டி, கல்லுப்பட்டி ஒன்றிய சுக்களாபுரம், ஊராண்டவரப்பனூர் போன்ற கிராமங்களில் நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுக்கு இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிற சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த இடங்களிலெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதென்னவென்றால், அந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற சங்கத்தில் நிதி இருக்கும்பட்சத்தில், அதன்மூலமாக சொந்தக் கட்டடம் கட்டுவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நிதியில்லாதபட்சத்தில், மாவட்டப் பொது நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி நிதியிலிருந்தோ, ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ, இடம் இருக்கும் என்று சொல்கின்றபோது, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்தோ கட்டிக்கொள்வதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த நிதியை கொடுக்கும்பட்சத்தில், விரைவில் கட்டிக்கொடுக்கப்படும், அல்லது விரைவாகக் கட்டிக்கொடுப்பதற்கான வழிவகை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**20—**

**குழந்தைகள் காப்பகம்**

***34239—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலமாக குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலே குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மூலமாக மூன்று மாவட்டங்களில் உருவாக்கியிருக்கும் காப்பகங்கள்போல எல்லா மாவட்டங்களிலும் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, அங்கன்வாடிகளை காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை இயங்கி வருகின்றன. அப்படி அல்லாமல், இந்தக் காப்பகங்களை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இயங்கவைக்கவேண்டும். தேவையான உணவு, பால், போன்றவை வழங்குவதுடன், கல்வி, விளையாட்டு இவற்றை ஊக்குவிக்கக்கூடிய உபகரணங்களை வழங்கி, அதற்கேற்ப பணியாளர்களையும், ஆசிரியர்களையும் நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள் காப்பகத்தில், 15 குழந்தைகள் உள்ளனர். இங்கு ஒரு பாலசேவிகா மற்றும் நடத்துனர் பணியில் உள்ளனர். கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்தக் காப்பகத்தில் ஒரு



2013 அக்டோபர் 25]

நடத்துனர் பணியில் உள்ளார். மதுரை மாவட்டத்தில் தற்காலிகமாக குழந்தைகள் இல்லாத காரணத்தால், குழந்தைகள் காப்பகத்தினுடைய செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது வேறு இடத்தில் குழந்தைகள் காப்பகம் துவங்குவதற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலர், சமூக நலப் பாதுகாப்புத் திட்டம், நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இங்கு பணியிலிருந்த ஒரு பாலசேவிகா மற்றும் இரண்டு நடத்துனர்கள் தற்போது தொழிலாளர் அலுவலகத்திலே பணிபுரிந்து வருகின்றனர். தற்பொழுது ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு, ரூ.15/– வீதம் செலவீனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாளொன்றுக்கு ரூ.20/– ஆக உயர்த்துவதற்கு ஆணையிட்டு, அது வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நேரங்களை மாற்றியமைத்தல் போன்ற பணிகள் மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காப்பகங்கள் அதிகமாக அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், மெட்ரோ இரயில் திட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற இடங்களில் அமைக்கப் பெறவேண்டும். தனியார் பங்களிப்புடன் இயங்கவும், சொந்தக் கட்டடம் உட்பட எல்லா வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப் பெறவேண்டும். அது தனியார் பங்களிப்புடனும் இயங்குமேயானால், பல்வேறு வசதிகளை நாம் உருவாக்கித் தர முடியும். அந்தவிதத்தில், அவ்வாறான காப்பகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 25

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற பள்ளிகளில் 2 குழந்தைகள், 1 குழந்தைதான் இருக்கிறார்கள். மேற்படி குழந்தைத் தொழிலாளர்கள் எங்கெல்லாம் புதிதாக இருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டால் அதற்குத் தகுந்தவாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு புதிய பள்ளிகளைத் தொடங்குவதற்கும் அதற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

**திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டத்தின்படி, 50 பெண் தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிகின்ற தோட்ட நிறுவனங்களில் குழந்தைகள் காப்பகம் வைக்கவேண்டும். ஆனால், நீலகிரி மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள 90 விழுக்காடு தனியார் தோட்ட நிறுவனங்களில் குழந்தைகள் காப்பகங்கள் வைப்பதில்லை. இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுவரை 71 குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த இடங்களில் தேவை ஏற்படின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 அக்டோபர் 25]

**21—**

## புறவழிச் சாலை

*__5928—திரு. கா.கோ. ரமேஷ்:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க முதற்கட்ட பணிகளுக்கான நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

**திரு. கா.கோ. ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், அன்னை தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த நாட்டு மக்களுக்கு நாளும் ஒரு நல்ல திட்டத்தை வழங்கிக்கொண்டு, தமிழகத்தில் இருக்கின்ற எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லை என்கின்ற நிலை வரவேண்டும் என்பதற்காக தாங்கள் தீட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் மக்களுக்காக, திட்டங்களுக்காக மக்கள் இல்லை என்று சூளுரைத்து, ஒரு நாளின் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் மக்களுக்காக உழைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2013 அக்டோபர் 25

65 ஆண்டுக் கால கனவை நனவாக்குகின்ற வகையில் என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த நல்ல செய்தியை அளித்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல அரசுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். இந்தப் பணி எப்போது தொடங்கப்படும், இதற்கான ஆயத்தப் பணிகளை உடனடியாகத் தொடங்கி செயல்படுத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதையும், இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகருக்கு புறவழிச் சாலை, திருப்பத்தூர்–சிங்காரப்பேட்டை சாலையில் ராஜமங்கலம் கிலோ மீட்டர் 6/4–ல் ஆரம்பித்து தாமல் ஏரிமுத்தூர் சாலையில் கிலோ மீட்டர் 0/8–ல் முடிவடையும் வகையில் மொத்தம் 14.5 கிலோ மீட்டர் நீளத்தில் அமைப்பதற்கு, ரூபாய் 8.52 கோடி செலவில் நிலம் கையகப்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**திரு. ஏ.கே.டி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பரங்குன்றம் தொகுதிக்கு புறவழிச் சாலை தேவையில்லை. அங்கு அரசு, மேம்பாலம் கட்டியிருக்கிறது. அதற்கு அரசுக்கு நன்றி. ஆனால், கட்டி முடிக்கப்பட்ட மேம்பாலத்தினை ஏன் திறக்கவில்லை என்று தெரியவில்லை. தாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சிறு சிறு பணிகள் அதிலே இருக்கும். ஆகவே, அந்தப் பணிகளெல்லாம் நிறைவடைந்தவுடன் விரைவில் பாலம் திறக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதிக்கு உட்பட்ட தென்காசி நகராட்சிப் பகுதியில் புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே 10 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். இப்பணி தொடர்பாக நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஆய்வுப் பணி தென்காசி நகராட்சிப் பகுதியில் நடைபெற்று வருவதை அறிகின்றேன். இப்பணி தற்போது எந்த நிலையில் உள்ளது. மேலும், நடப்பாண்டில் புறவழிச் சாலை அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியவாறு தென்காசி அருகிலே தற்போது நில எடுப்புப்

பணி நடைபெற்று வருகின்றது. அது நிறைவடைந்தவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் அளே தருமபுரியிலிருந்து மாருதிபுரம் வரை நெடுஞ்சாலையில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இருபுறமும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி சாலைகளை விரிவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஆய்வுசெய்து, ஆக்கிரமிப்பு இருந்தால் அதை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் உள்ள ஒட்டுமொத்தத் தமிழர்களின் நலன் காக்கும் தாயாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் நகராட்சியின் மையப் பகுதியில் கோவையிலிருந்து கூடலூர் வரை செல்கிற தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. இந்தச் சாலை போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. காரணம் இந்தச்





சாலையை ஒட்டித்தான் பேருந்து நிலையம், இரயில்வே நிலையம், பொது மருத்துவமனை, அரசு மேல்நிலைப் பள்ளி போன்றவை அமைந்துள்ளன. இதனால் காலை, மாலை நேரங்களிலே போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் 2005–ல் மேட்டுப்பாளையம் நகராட்சிக்குப் புறவழிச் சாலை அமைக்கின்ற ஒரு திட்டம் ஆய்வுசெய்து முடிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால் அன்றிலிருந்து இதுநாள் வரையிலே தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பிலே போட்டுவிட்டது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலே ஆய்வு செய்யப்பட்ட அந்தப் புறவழிச் சாலைப் பணியை மீண்டும் ஆய்வுசெய்து, மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சுற்றுச் சாலை அமைக்கும் பணியை மாநில அரசாங்கமே எடுத்து செய்து கொடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அந்தப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியை மேற்கொண்டு வருகின்றது. அதிலே, பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன குறிப்பாக, நில எடுப்பு நிலையில் பல பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே அது தள்ளிப் போய்க்கொண்டிருக்கின்றது. இருந்தாலும், விரைவாக பணிகள் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய இரண்டு நகரங்களும் போக்குவரத்தால் பல்வேறு

நெருக்கடிக்கு உள்ளாகின்றன. எனவே, ஆய்வுசெய்து நிலுவையில் இருக்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையத்திற்கு இடையேயான புறவழிச் சாலையைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு விரைந்து முடிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, தென்காசி சட்டமன்றத் தொகுதி ஆகிய மூன்றையும் இணைக்கின்ற கீழ்வீராணமுத்தூர், அழகியபாண்டிபுரம் நெடுஞ்சாலை 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. அதன் பின்பு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தச் சாலை பராமரிக்கப்படவில்லை. இப்பொழுது அந்தச் சாலை மிகவும் மோசமாக உள்ளது. அந்தச் சாலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சீர் செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் படிப்படியாக சாலையைச் சீரமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக நிதி





ஒதுக்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராமநாதபுரம் தொகுதியிலே கிழக்குக் கடற்கரைச் சாலையிலிருந்து பட்டினக்காட்டான் வரை ஒரு புறவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் புறவழிச் சாலையின் இணைப்புப் பாலத்தில் பழுதுகள் இருந்ததன் காரணமாக இன்னும் அது செயல்பாட்டுக்கு வரவில்லை. அந்தப் பழுதுகளை நீக்கி, விரைவிலே அந்தச் சாலையைப் போக்குவரத்துக்கு வசதியாக ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்த சாலையைச் சீரமைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்தச் சாலைகள் எல்லாம் இப்பொழுது ஆய்வில் எடுக்கப்பட்டு, சீரமைப்பதற்கு அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி, மயிலாடுதுறை நகரத்தைச் சுற்றி புறவழிச் சாலைக்கு நிலம் எடுக்கும் பணி எந்தத் தடையும் இல்லாமல் மிகத் தாமதமாக நடைபெற்று வருகிறது. உடனடியாக அந்த நிலம் எடுக்கும் பணியை முடித்து பணியைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் நிலம் எடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. புறவழிச் சாலையைத் தனியார் நிலத்தைக் கையகப்படுத்தித்தான் அமைக்க முடியும். ஆகவே, தனியார் நிலத்தைக் கையகப்படுத்துகின்றபொழுது சில பேர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள், அதனால் காலதாமதம் ஏற்படுகின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைந்து நிலம் எடுக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதன்படி, அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் லால்குடி பேரூராட்சியில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13 தூண்கள் எழுப்பப்பட்டதோடு, கடந்த இரண்டாண்டு காலமாக அந்தப் பணி தடைபட்டுள்ளது. அந்தப் பணியை அரசு முழுமையாக நிறைவேற்றித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடியிலே பணிகள் காலதாமதமாக நடைபெறுவதாக இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை ஆய்வுசெய்து விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–தூத்துக்குடி நெடுஞ்சாலையில் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறுக்கு சாலை பகுதியில் மேம்பாலம் அமைக்காத காரணத்தினால், குறிப்பாக, அருப்புக்கோட்டை—விளாத்திக்குளம் சாலையும், தூத்துக்குடி—மதுரை நெடுஞ்சாலையும் சந்திக்கக்கூடிய இடத்தில் அடிக்கடி பெரிய விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் நடக்கின்றன. எனவே, தமிழ்நாடு அரசின் சார்பாக தேசிய நெடுஞ்சாலைத் துறையிடத்திலே அங்கே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் வருகின்ற காரணத்தினாலே, மாநில அரசு அதைச் செய்ய இயலாது. ஏனென்றால், மாநில அரசு செய்யவேண்டும் என்று சொன்னால் மாநில அரசின் நிதியிலிருந்துதான் அந்த மேம்பாலத்தைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வுசெய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் 3 ஆண்டுக் காலமாகப் புறவழிச் சாலைக்கான நில எடுப்புப் பணிகள் எல்லாம் முடிவடைந்து கடைசிக் கட்டப் பணியாக நின்றுகொண்டிருக்கின்றது. எனவே, விரைவாக அந்தப் பணியை முடித்து இந்த ஆண்டு புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்று கேட்பதோடு, ஏற்கெனவே சிவகங்கை தலைநகரைச் சுற்றி ஒரு சுற்றுவட்டப் பாதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தது. அந்தப் பணியும் தொடரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு அறிவிப்பு தந்தார்கள். அதன்படி தற்போது நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. அந்தப் பணி நிறைவு பெற்றவுடன் விரைவாக புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

*__14974—திரு. ஆர். சாமி:__

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, முக்கம்பட்டி, சா. மீனாட்சிபுரம், செம்பூர் மற்றும் மலைநகர் ஆகிய கிராமங்களில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை.

அரசால் வகுத்தமைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும் என்ற நிபந்தனைகள் முக்கம்பட்டி, சா. மீனாட்சிபுரம், செம்பூர் மற்றும் மலைநகர் ஆகிய கிராமங்களில் பூர்த்தியாகவில்லை.





இந்த நான்கு கடைகளிலுமே தற்போது குடும்ப அட்டைகள் 53 முதல் 115 வரை மட்டுமே உள்ளன. தாய்க் கடையிலும் இந்த அட்டைகளைப் பிரித்தபின் 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, மேற்கண்ட நான்கு கிராமங்களிலும் புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலுள்ள முக்கம்பட்டி, சாத்தமங்கலம், சா.மீனாட்சிபுரம், நடுப்பட்டி, செம்பூர், அதுமட்டுமல்லாமல் மேலூர் தொகுதியில் மொத்தம் 16 பகுதிநேர நியாய விலைக் கடைகளைப் பிரிக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மக்கள் சிரமம் இல்லாமல், இன்றைக்கு நிம்மதியாக வாழ்வதற்கு, இந்தியாவில் எந்த ஒரு முதலமைச்சரும் செய்யாத திட்டங்களை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில், ரேஷன் கடையைப் பிரிப்பது என்பது கூட்டுறவுத் துறையும், உணவுத் துறையும் இதைத் தட்டிக் கழிக்காமல், இரண்டு துறைகளும் ஒன்றுசேர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று 100 குடும்பங்கள் குடியிருந்தாலே அந்தப் பகுதிக்கு ரேஷன் கடையைப் பிரித்துக்கொடுத்தால், அந்த 100 குடும்ப மக்கள் அதிக தூரம் நடக்காமல், பொருட்களை வாங்குவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்றால், 150, 500 கார்டுகள்தான் வேண்டுமென்று சட்ட விதி இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அந்தச் சட்ட விதிகளைத் தளர்த்தி அந்தந்தப் பகுதிகளிலேயே 80, 100 கார்டுகள் மலைப் பகுதிகளிலோ, கிராமப் பகுதிகளிலோ நான்கைந்து கிலோ மீட்டர் தூரம் உள்ள மக்களுக்குப் பொருள் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியின், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த புதிய பகுதிநேர கடைகள் முக்கம்பட்டி, சா.மீனாட்சிபுரம், செம்பூர் மற்றும் மலைநகர் ஆகிய கிராமங்களில் தொடர்புடைய தாய்க் கடைகளில் இணைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்களெல்லாம் தொய்வின்றி கொடுக்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் எந்தவித சிரமமும் இல்லாமல் தங்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 362 முழுநேரக் கடைகளும், 689 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. இதில் மதுரை மாவட்டத்தில் மட்டும் 17 முழுநேரக் கடைகளும், 19 பகுதிநேரக் கடைகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி புதியதாகத் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு மேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேலூர் தொகுதியில் மூன்று முழுநேரக் கடைகளும் 6 பகுதிநேரக் கடைகளும் புதியதாகத் திறக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் கோரும் இடங்களில் எல்லாம், பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருந்தாலும் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, கூடுதல் செலவினங்களைத் தவிர்க்க வேண்டி, நிபந்தனைகள் பூர்த்தியாகாத இடங்களில் பகுதிநேர அங்காடிகள் திறப்பதில் சிரமம் உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, தமிழ்நாட்டிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, அரிசி, மண்ணெண்ணெய் ஒதுக்கீடு





இவற்றையெல்லாம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளும் மத்திய அரசின் நடவடிக்கைகளையும் மீறி, தமிழ்நாட்டிலுள்ள 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்குகிற ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனைக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல் உணவுத் துறைக்கு மட்டும் 4,900 கோடி ரூபாயை மானியமாக வழங்குகிற தலைவியும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மேலூர் தொகுதியில் எல்லாத் திட்டங்களும் 100 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பல்வேறு ரேஷன் கடைகளைப் பிரித்துக் கொடுத்திருந்தாலும் இன்னும் 16 பகுதிநேர ரேஷன் கடைகளை என்னுடைய தொகுதியில் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கடைகளைப் பிரிப்பதினால் கூட்டுறவுத் துறைக்கோ, உணவுத் துறைக்கோ நிச்சயம் கூடுதல் செலவுகள் ஏற்படாது. ஏனென்றால், அங்கு கடை வைப்பதற்கு அப்பகுதி மக்களே இடத்தை கொடுத்துவிடுகிறார்கள். கூடுதலாக வாடகையைக் கட்டுவதற்குக்கூட அப்பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். புதிய ரேஷன் கடைக்கு ஆட்களை நியமிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர். சாமி:** அங்கு பணிபுரிபவர்களை வாரத்திற்கு ஒரு நாள் அந்தப் பகுதிக்கு அனுப்புவதனால் கூடுதல் செலவோ, சம்பளமோ கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கடந்த

[2013 அக்டோபர் 25

காலங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் பட்டா மாறுதல்கள் என்றாலும், OAP போன்றவற்றிற்குச் சான்றிதழ்களை வருவாய்த் துறையில் வாங்குவதாக இருந்தாலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், தாலுகா அலுவலகத்திற்கும் மக்கள் அலைய வேண்டியிருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு இன்றைக்கு அரசு அதிகாரிளை அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பி ஊருக்கு ஊர் பட்டா மாறுதல் போன்ற பல்வேறு சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்துகொண்டிருக்கின்றது. அப்பேர்ப்பட்ட வேளையில், இந்தப் பகுதிநேர ரேஷன் கடைகளைப் பிரித்துக்கொடுப்பதில் சிரமங்கள் இருந்தால், நடமாடும் ரேஷன் கடைகளை ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது. இப்படி நடமாடும் ரேஷன் கடைகளை ஆரம்பித்தால், ஒரே வாகனத்தில் ரேஷன் பொருட்களை எடுத்துக்கொண்டு அந்தந்த சிறிய சிறிய ஊர்கள் இருக்கின்ற கிராமப் பகுதிகளுக்கும் ஒரு நாள் சென்று அந்தப் பகுதி மக்களுக்கு விநியோகம் செய்வதற்குப் வாய்ப்பாக இருக்கும். அப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சொல்லி. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இருட்டுக்காட்டைச் சுற்றியுள்ள 7 மலை கிராம மக்கள், ரேஷன் பொருட்களைப் பெற வேண்டுமென்றால், 4 அல்லது 5 கிலோமீட்டர் தூரம் மலைப் பகுதியில் நடந்து வந்து பெறவேண்டியிருக்கிறது. மலைக் கிராமம் என்பதால், வன விலங்குகளாலும், யானைகளாலும் தாக்கப்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, தோட்டிக்குப்பம் கிராமத்திலே பகுதிநேர நியாய விலைக் கடை துவங்கவேண்டும் என்று அரசுக்கு முறையாக கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே, மலைவாழ் மக்களினுடைய நலனைக் கருதி, தோட்டிக்குப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடையை முன்னுரிமை அடிப்படையில் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகள் பூர்த்தி ஆகாத இனங்கள் என கண்டறியப்பட்ட மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகள், ஜாதி அடிப்படையில் கூர் உணர்வு காரணமாக, சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் எழக்கூடிய இடங்களில் மாவட்ட ஆட்சியர்கள் அங்குள்ள நிலைமைக்கேற்ப சிறப்பு நிகழ்வு காரணங்களை விளக்கி புதிய பகுதிநேர அங்காடிகளைத் திறப்பதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்பவேண்டும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகள் பூர்த்தி ஆகாத நிலையிலும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று, மலைவாழ் பிரதேசங்கள் போன்றவற்றில் வாழும் குடும்ப அட்டைதாரர்கள் நலன் கருதியும் 20 நடமாடும் நியாய விலை அங்காடிகளை அமைத்து மலைவாழ் மக்கள் இருப்பிடத்திற்கே சென்று விலையில்லா அரிசி முதலான அத்தியாவசியப் பொருட்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

[2013 அக்டோபர் 25

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு 20 கிலோ விலையில்லா அரிசியும் தந்து, ஏழை எளிய மக்களின் பசியைப் போக்க அம்மா உணவகம் மூலம் மலிவு விலை உணவையும் தந்து, அன்னபூரணியாக விளங்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் உள்ள தொல்லி, வேளாம்பட்டி, பொன்னகரை, சோளகனை, தம்பரெட்டி ஆகிய மலைக் கிராமங்களுக்குப் பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பகுதிநேர அங்காடிகளைத் திறக்கவேண்டும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சி, கடம்பங்குடி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாவட்ட வழங்கல் அலுவலர்மூலம் முன்மொழிவு அனுப்பப்பட்டு ஓராண்டுக்கு மேலாகிறது. இதுவரை நியாய விலைக் கடை அங்கு அமைக்கப்படவில்லை. ஆகவே, இந்தப் பகுதிநேர அங்காடியை விரைந்து அமைப்பதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

*முற்பகல் 11–05*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பரந்து விரிந்த தொகுதி. அந்தத் தொகுதியில் கரிசல்பட்டி, கொம்புக்காரன்புலியூர், அண்ணாபுரம் ஆகிய 3 கிராமங்களுக்குப் பகுதிநேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பரிசீலிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரு பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ.கே. போஸ் மற்றும் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 25

**23—**

**தூர் வாருதல்**

*****18903—திரு. ஏ.கே. போஸ்:**

**திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை மாநகரிலுள்ள செல்லூர் கண்மாயைத் தூர் வாரி, ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை, செல்லூர் கண்மாயைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். செல்லூர் கண்மாயைத் தூர்வாரி, வளப்படுத்தும் பணியை உள்ளடக்கி, செல்லூர் கண்மாயிலிருந்து வெளியேறும் வெள்ள நீரை வைகை ஆற்றுக்கு மூடிய கால்வாய்மூலம் கடத்துவதற்குத் திட்ட மதிப்பீடு ரூ.703.50 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, செல்லூர் கண்மாய் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாராமல் கண்மாய் முழுவதுமே படிப்படியாக மண் சேர்ந்து மேடானபடியாலும், அங்கே சீமைக்கருவேல முள் முளைத்து புதர்களாகக் காட்சியளிக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நிலத்தடி நீரைச் சேமிப்பதற்காக, அந்தக் கண்மாயைத் தூர்வாரி, அங்கே நிலத்தடி நீரை சேமித்தால், அங்கே அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் ஆதாரம் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அந்தக் கண்மாயைத் தூர்வாரிக் கொடுப்பார்களா என்று தங்கள்மூலமாக கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.703.50 இலட்சத்திலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு தயாரித்து, செய்து கொடுப்பதற்கு ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லூர் கண்மாய் 94 ஏக்கர் பரப்பளவு கொண்ட கண்மாய். அது தற்போது 52 ஏக்கராக சுருங்கிவிட்டது. சமீபத்தில்கூட நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதைத் தூய்மைப்படுத்தக்கூடிய பணியைத் துவக்கி வைத்தார்கள். கண்மாய்க்கரையும், கண்மாயும் சமமாகிவிட்டது. எனவே, அந்தக் கண்மாயைத் தூர்வாரி, தண்ணீர் தேக்குவதோடு, கண்மாய்க்குள் மழை நீர் வடிகால் அமைத்து நீர் செறிவு தொடர்ந்து ஏற்படுவதற்கு வசதி செய்யப்பட்டால் நிரந்தரமாக நீர் நிரப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு நிலத்தடிநீர் உயர்வு ஏற்படும். சுமார் 2 இலட்சம் மக்கள் இதனால் குடிநீர் பெற்று பயன்பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதோடு நிரந்தரமாக நீர் நிரப்பினால், எதிர்காலத்திலே சுற்றுலாத்தலமாகவும் மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அதேபோல, மாடக்குளம் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு கண்மாய்களைத் தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இன்றையதினம் வரையிலும் அரசாணை வெளியிடப்படவில்லை. அதையும் உடனடியாக வெளியிடவேண்டும் என்பதை நான்

[2013 அக்டோபர் 25

இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன். செல்லூர் கண்மாயில் பாசன வசதியே இல்லை, வெறும் குடிநீர் பிரச்சினைதான். எனவே, இதற்கு பொதுப் பணித் துறை நிதி ஒதுக்கீடு செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை. எனவே, செல்லூர் கண்மாயை மாநகராட்சியிடம் ஒப்படைத்து, மாநகராட்சி எடுத்துக்கொண்டால் எதிர்காலத்திலே குடிநீருக்கு இதை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் வரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதுரை, கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** 5 கிலோ மீட்டர் வரையிலும் நிலத்தடிநீர் உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்மாயை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். விரைவிலே அந்தப் பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பல்வேறு குளங்கள் தூர்வாரப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பணிகளும் விரைவிலேயே நடைபெறும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஆனைக்குட்டம் மற்றும் குல்லூர்சந்தை அணைக்கட்டுகளைச் சீரமைக்க மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் 'டிரிப்' (DRIP) திட்டம்மூலம் 2011–2012 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டும், இதுவரை



2013 அக்டோபர் 25]

எந்தப் பணிகளும் துவங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதாரமாகவும், நீராதாரமாகவும் இருக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் மற்றும் குளங்கள் எல்லாம் நீண்டகாலமாகத் தூர்வாரப்படாமல் இருக்கின்றன. மழைக் காலங்களில் தண்ணீரை சரியாகச் சேகரித்து வைக்கமுடியாத நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளைத் தூர்வாரினால் அதிலிருந்து கிடைக்கக்கூடிய மணலை வைத்துக்கொண்டு, மாவட்ட மக்களுடைய 10 ஆண்டுகளுக்கான மணல் தேவையை நிவர்த்திச் செய்ய முடியும். சென்ற கூட்டத்தொடரில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர்வாருவதற்கு ஒப்புக்கொண்டார்கள். ஆகவே, எப்பொழுது அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்பதையும், விரைவிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் நீண்டநாள் கோரிக்கையாக இருந்தது. ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 8 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. அந்தப் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தக் கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கு உட்பட்ட கண்மாய்களை இப்பொழுதே தூர்வாரி வைத்தால், அது அப்பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விக்கிரமங்கலம் கண்மாய் மற்றும் ஐயனார்குளம் கண்மாய் போன்றவை தூர்வாரப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எனவே, அந்தப் பணிகளையும் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அந்தக் கண்மாய்களைத் தூர்வாருவதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## கால்நடை கிளை மருத்துவமனை

***33882—திரு. செ. காமராஜ்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடைக் கிளை மருத்துவமனை தேவை என்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைப் பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு அந்தக் கிராமம் வருகிறது. வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு கால்நடை பராமரிப்புத் துறைக்கு நிதியினை வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையைப்பெற்று, அந்தக் கிராமத்திற்கு ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கே வழிகாட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து அப்பகுதி மக்கள் நலன் மட்டுமின்றி, ‘அம்மா, அம்மா’ என்று அழைக்கும் கால்நடைகளின் நலன் காத்த எங்களுடைய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, அப்பகுதி விவசாய மக்கள் தாங்கள் அறிவித்த இந்தச் செய்தியைக் கேட்டவுடன் எல்லையில்லா மகிழ்ச்சி அடைவார்கள் தாயே!

ஏழை விவசாய மக்களுக்கு விலையில்லா ஆடுகள், பசு மாடுகள் தந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் தாயாக இருப்பதுபோல், கால்நடை ஜீவன்களுக்கும் தாயாக ஆட்சி செய்யும் எங்கள் அன்னையே, தங்கள் பாதம் பணிந்து நன்றி கூறுகின்றேன்.

[2013 அக்டோபர் 25

*முற்பகல் 11–15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் துவக்கப்படுமா என்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100 கிளை நிலையங்களை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில்தான் 100 கிளை நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே ஆணையைப் பெற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே, வரும் நிதியாண்டிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

**திரு. செ. காமராஜ்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**25—**

## சர்க்கரை ஆலை

***35682—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 25]

*(அ) கலசப்பாக்கம் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, செய்யாற்றின் நதிக்கரையில் சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. அத்தொகுதியில் உள்ள 3 சர்க்கரை ஆலைகளும் விவகார எல்லை பகுதியாக உள்ளது. இருந்தாலும், புதிய சர்க்கரை ஆலை அமைக்க போதுமான கரும்பு பயிரிட பரப்பு அதிகமானால் மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மிகம் நிறைந்த தீபம் மாவட்டமாம், திருவண்ணாமலை மாவட்டத்தின் மையப் பகுதியில் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ளது. மலை சூழ்ந்த இடம் யாவும், இலை கொண்ட இயக்கத்தின் தாய் வீடாகும், மலை சூழ்ந்த இடம் யாவும், இலை கொண்ட இயக்கத்தின் தாய் வீடாகும். வாஞ்சை கொண்ட நம் தாய்க்கு வரலாற்றுப் புகழ் பாடும் வாகைப் பூக்களை வழங்க இருக்கின்ற பூக்காடுதான் ஏற்காடு. வாஞ்சை கொண்ட நம் தாய்க்கு வரலாற்றுப் புகழ் பாடும் வாகைப் பூக்களை வழங்க இருக்கின்ற பூக்காடுதான் ஏற்காடு. ஆம்! வெற்றித் தேவதையை நம் தாய்க்குத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்ற ஏற்காட்டின் தொடர்ச்சியாம் ஜவ்வாது மலை அடிவாரத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கைச் சூழ்நிலை நிறைந்த மிருகண்டா நதி அணைக்கட்டும், செண்பகத் தோப்பு அணைக்கட்டும், செய்யாறு, மிருகண்டா நதி போன்ற ஆறுகளும் உள்ளடங்கிய கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி விவசாயத் தொழில் சார்ந்த தொகுதியாகும்.*

*தமிழ்நாட்டில் கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார நிலைமையைச் சர்க்கரைத் தொழில் மேம்படுத்தி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 இலட்சத்து 75 ஆயிரம்*

[2013 அக்டோபர் 25

ஹெக்டேர் பரப்பளவு பயிரிடப்படும் பகுதியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சற்றே ஏறக்குறைய 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. இதில் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 22 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்படுகிறது.

எனவே, கழகத்தின் கோட்டையாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் எஃகுக் கோட்டையாகவும் தொடர்ந்து வலம் வந்து கொண்டிருக்கும் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களின், விவசாயிகளின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், தாயுள்ளம் கொண்ட நம் தாயின் நல்லாட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டுறவுத் துறை அல்லது பொதுத் துறை அல்லது தனியார் துறை மூலமாகப் புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஆவன செய்யுமாறு தாயின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கலசப்பாக்கம் தொகுதியில் 50 ஆயிரம் ஏக்கர் கரும்பு சாகுபடி செய்வதாகக் கூறியுள்ளார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதி 3 சர்க்கரை ஆலைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சர்க்கரை ஆலைக்கு 15 ஆயிரம் ஏக்கர் தேவை. ஆகையால் 3 சர்க்கரை ஆலைகளுக்கும் 45 ஆயிரம் ஏக்கர் அளவுதான் இருக்கின்றது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் கரும்பு சாகுபடி அதிகமாக உருவாகின்ற சமயத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று சொல்லியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தனியார் துறை என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையின் வாயிலாகவோ, பொதுத் துறையின் வாயிலாகவோதான் மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரையில் செய்வார்கள். எந்தச் சூழ்நிலையிலும் தனியார் சர்க்கரை ஆலைக்கு ஆதரவாக இருக்கமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா அரிசி தந்து, வீடுகள்தோறும் மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி தந்து, கல்விக்கு கணினி தந்து, கறவைக்கு மாடு, ஆடு தந்து, பசுமை வீடும் தந்து, பரிவோடு தாலிக்குத் தங்கமும் தந்து, முதியோருக்கு உதவித் தொகை தந்து, இப்படி எல்லோருக்கும் எல்லாமும் அள்ளித் தந்து, ஏங்கி நிற்கும் ஏழைகளை இதய சுத்தியோடு தாங்குகின்ற தமிழகத்தின் தலைமகளே! (மேசையைத் தட்டும் ஒலி)

நாளைய பாரதத்தின் மணிமகுடத்திற்குத் தலைமை ஏற்கவிருக்கும் எங்களின் வெற்றித் தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) ஈரடியில் உலகளந்த இறைவன், ஈரடியில் உலகளந்த இறைவன், ஈரிலையால் தேசம் ஆள ஈன்றிட்ட பேரறிவே! (மேசையைத் தட்டும் ஒலி) ஜாதி சதியும், மத பகைமையும் இல்லா சமத்துவ தேசம் காண, சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே! பாரதம் காத்திட பரிவோடு படைத்திட்ட எங்களின் திருவரங்கத்து கீதையே! தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன் மூலமாக திறமை மற்றும் போட்டியிடும் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் முதலீடுகளை ஈர்ப்பதில் ஆசியாவின் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகத்தைக் கொண்டு வருவதற்காகவும், முதலீடுகளை மேற்கொள்வதற்கு இந்தியாவிலேயே மிகவும் விரும்பப்படும் மாநிலமாகவும் தமிழகத்தைத் தரம் உயர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த தமிழகத் தொழில் துறையில், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள 28 மாநிலங்களில் முதல் மாநிலமாகத் தரம் உயர்த்தி, சாதனை படைத்த நம் அற்புதத் தலைவியின் நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) வல்லரசே நாடி வந்த நம் தாயின் நல்லரசில், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ் கூறும் நல்லுலகின் ஒரே ஒப்பற்றத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறி அமர்கிறேன்.

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***1264—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, அழகம்பட்டியிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழகம்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட பரிசீலித்து, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலையில், கலசப்பாடி நடுநிலைப் பள்ளி ஏறக்குறைய 20 ஆண்டுக்காலமாகத் தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. அதில் 175 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்க வேண்டுமென்று சொன்னால், சித்தேரிக்கு 12 கிலோ மீட்டர் தூரமும், வாச்சாத்திக்கு 9 கிலோ மீட்டர் தூரமும் நடந்தே



2013 அக்டோபர் 25]

சென்று படிக்க வேண்டிய அவல நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்கூட நான் இதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறேன். எனவே, வரும் கல்வி ஆண்டிலாவது கலசப்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும், மலையிலே இருக்கக்கூடிய பேரேரிப்புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? பழங்குடியின மாணவர்களின் கல்வியை உத்தரவாதப்படுத்துகின்ற வகையிலும், உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அது அமையும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதிகளில் அமைந்திருக்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதில் தமிழக அரசு முனைப்புடன் உள்ளது. இதுசம்பந்தமாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தேவைப்படும் இடங்களில் பள்ளிகளைத் தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## புதிய பேருந்துகள்

***19998—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேருந்துப் பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பணிமனையிலிருந்து 15 நகர் பேருந்துகள்மூலம் 206 நடைகளும், 11 புறநகர் பேருந்துகள்மூலம் 102 நடைகளும் என 26 பேருந்துகள்மூலம் மொத்தம் 308 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளின் சராசரி வயது 5.5 ஆகும். நடைமுறை விதிகளின்படி பேருந்துகளின் சராசரி வயது ஆறு ஆண்டுகள் அல்லது ஏழு இலட்சம் கிலோ மீட்டர் இயக்கம் ஆகும். இவற்றில் எது முன்னரோ அதன்படி அப்பேருந்து மாற்றம் செய்யப்படும். பேராவூரணி பணிமனைக்கு இரண்டு பேருந்துகளும், பேராவூரணி தொகுதிக்கு ஐந்து புதிய வழித்தடங்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

**திரு. செ. அருண் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய அம்மாவுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த வருடம் ஏப்ரல் மாதம் என்னுடைய தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி–i.e. Arts and Science College கொடுத்தார்கள். வெறும் ஆறு மாதங்களில், செப்டம்பர் 13–ல் அதை inaugurate செய்து கொடுத்தார்கள். உண்மையிலேயே என் தொகுதி மக்களின் சார்பாக மிகப் பெரிய நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் Military School–ல் படிக்கும்போது என்னுடைய classmates எல்லாம் North Indians. தற்போது அவர்கள் Ministers and I.A.S., Officers ஆகப் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏப்ரல் மாதத்தில் இந்த அறிவிப்பு செய்தவுடன் அவர்களிடம் சொன்னேன். அதன்பின்னர் ஆறு மாதம் கழித்து என்னுடைய தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வந்ததை அவர்களிடம் சொன்னவுடன், அவர்களால் அதை



2013 அக்டோபர் 25]

நம்பவே முடியவில்லை. They said it is a political miracle. Then I told them she is a miracle Madam. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக 2014–ல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு டில்லியிலும் இந்த miracle–ஐ நீங்கள் பார்ப்பீர்கள் என்று நான் உறுதியாகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என் தொகுதி மக்கள் இந்த ஆட்சியை நன்றியோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அம்மா அவர்கள்தான்.

நான் இந்தக் கேள்வியை நீண்ட நாட்களுக்கு முன்னர் கேட்டேன். அதற்கு இன்றையதினம்தான் விடை கிடைத்தது. அதைப்பற்றி நினைவூட்டாமல் இருந்துவிட்டேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே என் தொகுதிக்கு நிறைய பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். கல்லூரி மட்டுமல்ல, கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாலைப் பணிகள் போன்ற நிறைய பணிகளைச் செய்து தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா தொகுதிகளுக்கும் அவர்கள் செய்ய வேண்டும் என்பதால் நான் அதிகமாக ஆசைப்படவில்லை. இப்போது இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் புதிய மாநகரப் பேருந்து பணிமனை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் இருந்தவர்கள் பேருந்துகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப புதிய பணிமனைகள் அமைக்கவேண்டும் என்ற சிந்தனை இல்லாமல்ஐந்து ஆண்டுகளில் அமைக்கப்பட்ட மொத்த பணிமனைகளின்

எண்ணிக்கை 10. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் இயக்கப்படும் அரசுப் பேருந்துகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும், சுத்தம் செய்யப்படவேண்டும், நல்லமுறையில் மக்களுக்கு இயக்கப்பட வேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2 ஆண்டுகளில் மட்டும் 68 போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை வழங்குவதற்கு உத்தரவிட்டு, அந்தப் பணிமனைகள் அமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அவர் தொகுதியிலுள்ள பணிமனைக்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உரிய காலத்தில் அந்தப் பணி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அந்தப் பணிமனை துவக்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண்.28, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***21670—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் தற்போது தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே தகவல் தொழில்நுட்பத் துறை மூலமாக ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2002 ஆம் ஆண்டு அரசு அறிவித்த தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின்படி, சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் என்பதற்கிணங்க, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னை–சோழிங்கநல்லூர், கோயம்புத்தூர்–விளாங்குறிச்சி, மதுரை–இலந்தைகுளம், மதுரை–வடபழஞ்சி, திருச்சி–நாவல்பட்டு, திருநெல்வேலி–கங்கைகொண்டான், சேலம்–ஜாகீர் அம்மாபாளையம், ஓசூர்–விஸ்வநாதபுரம் ஆகிய 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாகியுள்ளன. மேலும், வேலூர் மற்றும் விழுப்புரத்திலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுந்த தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள தொழில்நுட்பவியல் பூங்காக்களில் பங்கேற்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் வந்தவாசி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க வாய்ப்பு

இருப்பின், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

**திரு. வே. குணசீலன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 386/மேய்க்கால் புறம்போக்கு நிலம் 145 ஏக்கர் அளவில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**29—**

## அரசு விழா

**34489—திரு. கடம்பூர் ராஜு:*

*மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*





மாமன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழாவை, அரசு விழாவாக அறிவிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, அறிவுடைமை, ஆற்றலுடைமை, இறையாண்மை, துணிவுடைமை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கின்ற அன்னையாய், நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து, இன்று கோரிக்கை வைக்கின்ற இடத்திலேயும், நாளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுகிற இடத்திலேயும் அமர இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தியாகிகளை, தீரர்களை, தலைவர்களை, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை மதிக்கின்ற மாண்பைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து தென் பகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்ட சான்றோர்களையும், தமிழ் மண்ணிற்குப் பெருமைச் சேர்த்த பெரியோர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் நினைவுகூர்ந்து, பெருமைப்படுத்துவதில் பல படிகள் முன்னே நிற்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய பெரியோர்களின் பிறந்த நாள் விழாக்களை நடத்துவதன்மூலம், அவர்கள் ஆற்றிய தியாகத் தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள நல்வாய்ப்பாக*

[2013 அக்டோபர் 25

அமையும் என்று கூறி, விழாக்களைச் சிறப்பாக நடத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி, ஆண்டுதோறும் சென்னையில் 27 விழாக்களையும், மாவட்டங்களில் 20 விழாக்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிட்டு, ஜூலை 7 ஆம் தேதி, அவரது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் பிறந்த நாள் விழாவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க கொண்டாடப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, தமிழ் மண் வாழவும், தமிழ் மக்கள் வாழ்வு உயரவும் பாடுபட்ட பெரியோர்களது புகழ் நிலைக்கும் வகையில், அவர்களைப் பெருமைப்படுத்துவதே தமது தலையாய கடமையாகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே பாரம்பரியமிக்க பிராமணர் குடும்பத்திலே பிறந்து, இலண்டனில் சட்டம் பயின்று,



2013 அக்டோபர் 25]

சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, புகழ் பெற்ற வழக்கறிஞர் தொழிலையும் விட்டு, சிறை சென்ற சுப்ரமணிய சாஸ்திரியார் அவர்கள் பிறந்த ஊர் ஆரணி. அங்கு அவருடைய பெயரிலே அரசு உதவி பெறக்கூடிய சுப்ரமணிய சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. எனவே, அவருடைய நினைவைப் போற்றுகின்றவகையிலே, ஆரணியில், சுப்ரமணிய சாஸ்திரியார் அவர்களுக்கு ஒரு மணிமண்டபம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் ஊற்றாம் அம்மா அவர்கள், தனது சிந்தையில் உதித்த விந்தைமிகு திட்டங்களால், விரைந்த செயல்திறத்தால் தமிழகத்தை முன்னெடுத்துச் செல்லும் தங்கமனத் தலைவி; புகழ்கொண்ட பெரியோர்களுக்கும், போற்றுதலுக்குரிய பெருமக்களுக்கும் ஏற்றதொரு நல்மதிப்பை, இசைவான கௌரவத்தை உவப்புடனே அளிக்கின்ற உத்தமப் பெண்ணரசி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாட்டின் மேன்மைக்கென தன்னலமற்ற சேவையாற்றிய தலைவர்கள், தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று தம்மையே நாட்டுக்காக அர்ப்பணித்த தியாகசீலர்கள் ஆகியோரின் நினைவைப் போற்றி, அவர்தம் புகழ் என்றென்றும் விளங்கவும், அவர்களது பெருமையை உணர்த்தும் வகையிலும் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் சிதம்பரநாதன் அவர்களுக்கும், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளியில் கீழப்பழூர் சின்னசாமி அவர்களுக்கும் திருவுருவச் சிலை அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2013 அக்டோபர் 25

*முற்பகல் 11–35*

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம் சங்ககிரியில் தீரன் சின்னமலை அவர்களுக்கும், விருதுநகரில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கும், சிவகங்கையில் வேலுநாச்சியார் அவர்களுக்கும், சென்னை இராயபுரத்தில் சிங்காரவேலர் மற்றும் ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணிமண்டபங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும், திருவாரூரில் மனுநீதி சோழனுக்கு நினைவு மண்டபம் அமைக்கவும், சிவகங்கையில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைக்கவும், திண்டுக்கல்லில் ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபம் அமைக்கவும், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சீரிய பணிகளைச் சிறப்புடன் ஆற்றி, பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**30—**

## மின்னணு ஆளுமை

**7768***—திரு. கே. தங்கவேல்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மின்னணு ஆளுமையின்கீழ் மனுக்களின் நிலையை அறிந்துகொள்ளும் வசதியை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். தற்போது மின் ஆளுகையின்கீழ் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களின் அவ்வப்போதைய நிலையை அறிந்துகொள்வதற்கான மென்பொருள் தற்போது வட்டாட்சியர் அலுவலகங்களில் இல்லை. எனவே, வட்டாட்சியர் அலுவலகங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாட்களில் பெறப்படும் மனுக்களைக் கணினியில் பதிவு செய்து, மனுக்களின் நிலை குறித்து அறிந்துகொள்ளும் வசதி செய்து கொடுக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணு ஆளுமையின்கீழ் மனுக்களின் நிலையை அறிந்துகொள்ளும் வசதி வேலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இருப்பதாகத் தகவல்கள் இருக்கின்றன. இந்த வசதியை மற்ற வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும். அப்படி விரிவுபடுத்துகிறபொழுது ஏற்கெனவே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு அதற்கான பயிற்சி கொடுத்து பயன்படுத்தவேண்டும். மற்றவர்களைத் தொகுப்பூதிய அடிப்படையில் பயன்படுத்தினால் முறையானதாக இருக்காது. முழுமை அடைகிற நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்து, எல்லாப் பகுதிகளுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமாய் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி கொடுத்து, பயிற்சியும் கொடுத்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வட்டாட்சியர் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அவ்வப்பொழுது கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு பணிகளுக்கு, களப் பணிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், கணினியில் பதிவு செய்யும் பணியை அலுவலர்கள் முழுமையாகச் செய்ய முடியாத காரணத்தால், தற்காலிகமாக Data Entry Operator–கள் நியமனம் செய்யப்பட்டு, நில ஆவணங்கள் கணினியிலே பதிவு செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று கவனிப்பதாகச் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*



2013 அக்டோபர் 25]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குச் சிறப்புக் கவன ஈர்ப்பு ஒன்றை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) அதைச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதற்கெல்லாம் தனியாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதை பதில் வரும்போது எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் அறிக்கை கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அறிக்கை வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும். இதையெல்லாம் திடீரென்று எழுப்ப முடியாது. ஏற்கெனவே உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள்.

*முற்பகல் 11–40*

மின் வெட்டு சம்பந்தமாக விவசாயிகள், சிறு. குறு தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்; பதில் வந்தவுடனே எடுத்துக் கொள்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சரியல்ல; இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர்கள் ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புகைப்படம் ஒன்றைக் காட்டினர்.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் அணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 25

என்னுடைய அனுமதியில்லாமல் அவையில் இதுபோன்று புகைப்படத்தைக் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அனுமதியில்லாமல் இதுபோன்று புகைப்படத்தை அவைக்குக் கொண்டு வந்து காட்டுவது, சட்ட விதிகளுக்கு, நம்முடைய சட்டமன்ற மரபுகளுக்கு ஏற்றதல்ல; சரியானதல்ல. அதை எடுத்து உள்ளே வையுங்கள். இல்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) முறையான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதுபோன்று புகைப்படத்தைக் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், நான் உடனடியாக உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

என்னுடைய அனுமதியில்லாமல் இதுபோன்று புகைப்படத்தை அவையில் காட்டுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) முறையில்லாமல், என்னுடைய அனுமதியில்லாமல், அவைக்கு இதுபோன்று புகைப்படங்களைக் கொண்டுவந்து காட்டுவது முறையல்ல. இது அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற செயலாக இருக்கின்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புகைப்படத்தைக் காட்டி கோஷமிட்டனர்.)*

அனுமதியில்லாமல் அவைக்குள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அனுமதி இல்லாமல் அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*



2013 அக்டோபர் 25]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்னுடைய அனுமதியில்லாமல், இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டதை, அவைக்குக் குந்தகம் விளைவித்ததை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இனிமேல் என்னுடைய அனுமதி பெறாமல் யாரும், எந்தப் பொருளையும் இதுபோன்று அவையிலே காட்டக் கூடாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுக்கவேண்டும்; உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. இப்போதுதான் பதில்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மின்வெட்டால் விவசாயிகள், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மின்வெட்டு சம்பந்தமாக விவசாயிகள், சிறு, குறு தொழில்முனைவோர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஏ. லாசர் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம், திரு. ந. நஞ்சப்பன் ஆகியோரும் பேரவை விதி 55–ன்கீழ்

*அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நான் வேறு சப்ஜெக்ட்டிற்குப் போய்விட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் வேறு சப்ஜெக்ட்டிற்குப் போய்விட்டேன். அடுத்த உறுப்பினரைப் பேசவும் அழைத்து விட்டேன். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நான் வேறு சப்ஜெக்டை எடுத்துவிட்டேன். நீங்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள்.*

*முற்பகல் 11–45*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டு 2008–லேயிருந்து தொடங்கி, அரசுக்கு ஒரு மிகப் பெரிய சவால் விடுத்துக்கொண்டிருந்தது. அந்தச் சவாலை வெற்றிகரமாக சமாளித்து, மின்வெட்டு என்ற நரகாசுரனை வீழ்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையான, ஒளிமயமான தீபாவளியைக் கொண்டாடுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அரசு எடுத்த முயற்சி, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களுக்கு ஏற்பட்டிருந்த இந்த மின்வெட்டு சிரமங்கள் குறைந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், சிறு, குறு தொழில்களுக்கு இன்றைக்கும் 20 சதவிகிதம் மின்வெட்டு என்பது தொடர்ந்து கொண்டிருப்பதை குறைக்கவேண்டும் என்று எங்களது கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.*

*குறிப்பாக, மாலை 6.00 மணி இரவு 10.00 மணி வரை தொழிற்சாலைகளில் 90 சதவிகிதம் மின் வெட்டு இருப்பதினால், தீபாவளி போன்ற முக்கிய பண்டிகைக் காலங்களில் உற்பத்தி கடுமையான பாதிப்பை ஏற்படுத்திருக்கிறது. ஆகவே, அதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.*





*சிறு, குறு தொழில்களுக்கு மின்சாரம்தான் உயிர் மூச்சாக இருக்கிறது. ஆகவே, மின்சாரத்தை அவர்களுக்கு முழுமையாக வழங்குவதற்கு, அரசு மிகச் சிறப்பான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதோடு, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகள் மின் இணைப்பிற்காகக் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் படிப்படியாக மின்சார இணைப்புகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளோடு, மின்வெட்டினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பல பிரச்சினைகளைப் பொதுமக்களும் நன்கு உணர்ந்திருப்பதினால், இந்த நேரத்தில் மின்சார சிக்கனத்திற்கான விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கும், மிகப் பெரிய ஸ்டார் ஹோட்டல்கள் உட்பட இன்றைக்கு சோலார் சூரிய ஒளியின் மூலமாக மின் சக்தியைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளுக்கு அரசு திட்டமிடுவதற்கும், இன்னும் பல துறைகளில் சூரிய ஒளி மூலமாக மின் சக்தி பெறுவதற்குரிய ஏற்பாடுகளுக்கும் இந்தக் காலக்கட்டத்தை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றவகையில், சிறு, குறு தொழில்களுக்கும், வேளாண்மைக்கும் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய மின்சாரத் தடையை அப்புறப்படுத்தி, முழுமையான மின்சாரம் வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து படிப்படியாக தமிழகத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த மின்வெட்டிலிருந்து, தமிழகத்தை முழுமையாக பாதுகாப்பதற்கான முறையில் கடந்த 2½ ஆண்டுக்காலமாக அம்மா அவர்கள் எடுத்து வந்திருக்கக்கூடிய நடவடிக்கையினுடைய விளைவாக, இன்று குறைந்த அளவிற்குத்தான் மின்வெட்டு இருப்பதை எங்களால் உணர முடிகிறது. அந்த அளவிற்கு இருள் சூழ்ந்திருந்த தமிழகத்தை, இன்றையதினம் ஒளியோடு திகழ்வதற்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அவர்களது ஆட்சியையும் பாராட்டுவதோடு, இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய குறைந்த மின்வெட்டிலிருந்து தமிழகத்தைப்*

பாதுகாக்கவேண்டும். சிறு, குறு தொழில்கள்தான் இன்றையதினம் அதிகமான வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கக்கூடியவையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அதேபோல, விவசாயிகள் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நேரத்தில், அவர்கள் விளைநிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மின்சாரத்தைக் குறிப்பிட்ட நேரத்தில் பயன்படுத்துவதற்கான முறையில், மின் விநியோகத்தை முறைப்படுத்த வேண்டுமென்ற நிலையிலும், பெரிய அளவில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு, மின்வெட்டினை விலக்கி, அவர்களுக்கு முழுமையான மின்சாரத்தைக் கொடுப்பதற்கான முறையிலே நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், புதிய திட்டங்களைக் கொண்டு வருவதற்கான முறையில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை பாராட்டுக்குரியது மட்டுமல்ல, அதை உடனடியாகத் துவங்கவேண்டுமென்ற அடிப்படையிலும், வரக்கூடிய தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் மின்வெட்டிலிருந்து பாதுகாப்பதற்கும், தமிழகத்தின் சிறு, குறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் மின்வெட்டிலிருந்து விடுபடுவதற்கான முறையிலே, அதனை ஈடுகட்டக்கூடிய முறையில், டீசல் போன்றவற்றைக் குறைந்த விலையில் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும் தமிழ்நாட்டில் நிலவும் மின் வெட்டு நிலைமையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இதனால், சிறு, குறு தொழில்கள் நடத்துபவர்கள் பாதிக்கப்படுவதாகத் தற்போது தெரிவித்தார்கள். இன்றைய நிலைமையில் மின்வெட்டு குறித்து கவலைகொள்ளக்கூடிய எந்த ஒரு சூழ்நிலையும் இல்லை என்பதை ஆரம்பத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை நமக்கு பல சக்திகளை வாரி வழங்கியிருந்தாலும் அவற்றில் மிகப் பெரிய அளவில் மக்களுக்குப் பயன்படுவதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் விளங்குவது மின் சக்தி என்று சொன்னால் அது மிகையாகாது. கண்ணால் பார்க்க முடியாத மின்சாரத்தை அதன் செயல்பாடுகளிலிருந்து, உணர்வதுபோல், மின் உற்பத்தியைப் பெருக்கதமிழகத்தை மின் மிகை மாநிலமாக்க நான் எடுத்துவரும் துரித நடவடிக்கைகளைக் கண்ணால் காண முடியாவிட்டாலும், தற்போதைய சீரான மின் விநியோகத்தின்மூலம் தமிழக மக்கள் எளிதில் உணர்ந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் அக்கறையின்மை, தொலைநோக்கற்ற பார்வை, நிருவாகத் திறமையின்மை காரணமாக ஒளிமயமாக இருந்த தமிழகம் இருளில் மூழ்கியது.

நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தின் மின் பற்றாக்குறை 4,000 மெகா வாட் அளவுக்கு இருந்தது. இதற்குக் காரணம், ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வரும் மின் தேவைக்கு ஏற்ப புதிய மின் திட்டங்களை உரிய காலத்தில் தீட்டாதது, ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட திட்டங்களைச் சரிவர நிறைவேற்றாதது, மின் விநியோக கட்டமைப்புகளை மேம்படுத்தாதது, நீண்டகால அடிப்படையில் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்யாதது என பல குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

1991 முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்தபோது, 1,302 மெகா வாட் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 561 மெகா வாட் மின் நிறுவு திறன் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது.

பின்னர், 2001 முதல் 2006 வரை நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, 2,518 மெகா வாட் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக மத்திய அரசின் விருதுகள் நமக்குக் கிடைத்தன. காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக விளங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தத்தில் தமிழகம் மின் மிகை மாநிலமாக விளங்கியது.

ஆனால், 2006 முதல் 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 206 மெகா வாட் அளவுக்கே கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது.

*முற்பகல் 11–55*

2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, தமிழ்நாட்டில் மின் தேவை அதிகரித்தபோதும், மைனாரிட்டி தி.மு.க. அரசு பொறுப்பேற்று ஓராண்டு வரை மின் பற்றாக்குறை இல்லாத நிலைமை நிலவியது. இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான் என்று அப்போதைய மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியே (மேசையைத் தட்டும் ஒலி) 3–4–2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசியிருப்பதை இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலைமை சிறிது காலம்தான் நீடித்தது. 2007 ஆம் ஆண்டு இறுதியிலிருந்தே நிலைமை தலைகீழாக மாற ஆரம்பித்தது. 2008 ஆம் ஆண்டில் இருந்து மின் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் தலை விரித்து ஆட ஆரம்பித்தது. இந்த அளவுக்கு நிலைமை மோசமானதற்கு அனல் மின் நிலையங்கள் சரியாகப் பராமரிக்கப்படாதது, மின் உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்தாதது, மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழகத்திற்குரிய மின்சாரத்தைப் பெற முடியாதது என பல்வேறு காரணங்கள் உள்ளன. இருப்பினும், நீண்டகால அடிப்படையில் அதாவது case–1 bidding என்கிற அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருந்தாலே இந்த மின் பற்றாக்குறையைச் சமாளித்திருக்கலாம். இதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்திருந்தால் நமக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கிடைத்திருக்கும். ஆனால், இதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யவில்லை. மாறாக அதிக விலை கொடுத்து குறுகிய கால அடிப்படையில் மின்சாரம் வாங்குவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், மின்சாரத்தைக் கொண்டுசெல்லும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டதால், நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன்விளைவாக, விலை கொடுத்தாலும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.





நான் மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தமிழகத்தில் மின் பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தேன். மின் பற்றாக்குறையை நீக்க எனது தலைமையிலான அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் நான் இந்த மாமன்றத்தில் பல முறை விரிவாக எடுத்துரைத்திருக்கிறேன். இந்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை போக்கப்படும் என்றும் நான் தெரிவித்திருந்தேன்.

600 மெகா வாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலமான ஐந்து ஆண்டுக் காலத்தில் 55 விழுக்காடு பணிகளே முடிக்கப்பட்டிருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தத் திட்டத்தினை விரைவுபடுத்தியதன் காரணமாக, தற்போது இந்தத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, இதிலிருந்து தற்போது நமக்கு தொடர்ந்து 500 மெகா வாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்தின் நிலை–II-ன் முதல் அலகை எடுத்துக்கொண்டால், 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன. நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, இந்தத் திட்டத்தின் பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் காரணமாக, தற்போது இந்தத் திட்டத்திலிருந்து நமக்கு 300 மெகா வாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வரும் டிசம்பர் மாதம் முதல் 600 மெகா வாட் மின்சாரம் இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி).

600 மெகா வாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையம் நிலை–II–ன் இரண்டாவது அலகுப் பணிகள் 40 விழுக்காடு மட்டுமே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்டிருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மீதமுள்ள 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சோதனை ஓட்டம் செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து 350 முதல் 450 மெகா வாட் மின் உற்பத்தி நமக்குக் கிடைக்கிறது. நவம்பர் மாத இறுதியிலிருந்து இந்தத் திட்டத்தின்மூலம் 600 மெகா வாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 25

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தேசிய அனல் மின் கழகத்துடன் கூட்டு முயற்சியில் ஏற்படுத்தப்பட்ட வட சென்னை, வல்லூரில் அமைந்துள்ள, 3X500 மெகா வாட் திறன் கொண்ட திட்டப் பணிகள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்தன. இந்தப் பணிகளை நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு துரிதப்படுத்தியதன் காரணமாக, தற்போது இரண்டு அலகுகள் வணிக ரீதியாக மின் உற்பத்தியை முறையே 29–11–2012 அன்றும் 25–8–2013 அன்றும் துவங்கியுள்ளன. மூன்றாவது அலகு அடுத்த ஆண்டு மே மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கும்.

மேற்கண்ட புதிய அனல் மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கியுள்ளதால், தற்போது கூடுதலாக 1,700 மெகா வாட் மின்சாரம் நமக்கு கிடைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து தூத்துக்குடியில் அமைத்துவரும் 2 x 500 மெகா வாட் அனல் மின் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக வ.உ.சி. துறைமுகத்திடமிருந்து பெறப்பட்டுள்ள நிலம் 'காடுகள்' என வருவாய்த் துறை ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், அதனை மறுவகைப்படுத்த உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதாவது, இதற்கு என்ன அர்த்தம் என்று புரிந்துகொள்ள வேண்டும். நியாயமாக, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு மின்சாரத் திட்டத்திற்கு நிலத்தை வகைப்படுத்திக் கொடுங்கள், அனுமதி கொடுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டால், தற்போது காங்கிரஸ் தலைமையில் செயல்படும் மத்திய அரசு, அனுமதியைத் தரவில்லை. அதனால்தான், உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்துள்ளோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்மூலம் வரும் ஆண்டு மே மாதம் முதல் மின் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, மத்திய கால அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு 500 மெகா வாட் மின்சாரம் இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பெறப்பட்டு வருகின்றது.



2013 அக்டோபர் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நண்பகல் 12–00

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நீண்டகால அடிப்படையில் 15 ஆண்டுகள் பெறத்தக்க வகையில் 1,000 மெகா வாட் + 20% பெறவேண்டி விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இதில் மொத்தம் 3,430 மெகா வாட் அளவிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் 1,208 மெகா வாட் பெறுவதற்குரிய ஒப்பந்தங்கள் 4 உற்பத்தியாளர்களுடன் ஆகஸ்டு மாதத்தில் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த ஒப்பந்தப்புள்ளியிலிருந்தே கூடுதலாக 2,122 மெகா வாட் மின்சாரம் பெற அனுமதி கோரி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு எடுத்த இந்தச் சீரிய முயற்சியால் மொத்தம் 3,330 மெகா வாட் மின்சாரம் 15 ஆண்டுகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பெருமளவு மின்சாரம் சட்டீஸ்கர், ஒடிசா மாநிலங்களிலிருந்து பெறப்படும்.

பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்தை எடுத்துவரத்தக்க மின் வழித் தடங்கள் இல்லாதது குறித்து நான் இந்த அவையிலே பல முறை பேசியிருக்கிறேன். இதனையடுத்து, தற்போது மகாராஷ்டிரா மாநிலம் சோலாப்பூரிலிருந்து கர்நாடக மாநிலம் ரெய்ச்சூர் வரை 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின் வழித் தடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது வரும் 2014 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின் வழித் தடமும், இதனைச் சார்ந்த துணை மின் வழித் தடங்களும் இயக்கி வைக்கப்படும்போது, நாம் கொள்முதல் செய்துள்ள மின்சாரத்தை முழுமையாகப் பெற முடியும்.

இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழை சிறப்பாகப் பெய்த காரணத்தால் நீர்மின் உற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த் தேக்கங்கள் ஏறத்தாழ முழு கொள்ளளவு நிலையை எட்டியுள்ளன. வருகின்ற வட கிழக்கு பருவ மழையும் நன்றாகவே அமையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தக் காரணங்களாலும் தமிழ்நாட்டின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்தில் 180 மில்லியன் யூனிட்டுகளாக இருந்து வந்த தினசரி மின் வினியோகம், இந்த ஆண்டு அதிகபட்சமாக 270 மில்லியன் யூனிட்டுகளை

எட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அக்டோபர் முதல் நாள் அன்று இதுவரை இல்லாத உச்சத் தேவையான 12,118 மெகா வாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் நிறைவு செய்தது என்பதை இந்தத் தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு 15–6–2013 முதல் தினசரி 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நிகழும் மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்ததற்கு ஏற்ப, 1–10–2013 முதல் உயரழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான மின்வெட்டு, உச்சத் தேவையான மாலை 6–00 மணி முதல் இரவு 10–00 மணி வரையுள்ள நேரம் நீங்கலாக, இதர நேரங்களில் 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோகத்திற்கான மின்வெட்டு சென்னையில் இரண்டு மணி நேரம் என்றும், இதரப் பகுதிகளில் மூன்று மணி நேரம் என்றும் இருந்தாலும், பெரும்பாலான நாட்களில் மின்வெட்டே இல்லை என்பதுதான் யதார்த்த நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்படாத மின்வெட்டு என்றிருந்த நிலை மாறி, தற்போது அறிவிக்கப்பட்ட மின்வெட்டும் நடைமுறைப்படுத்தாத நிலை ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. ஆட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடு இதுதான். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மக்களை ஏமாற்றிக்கொண்டே இருந்தார்கள். மின்வெட்டு என்று அறிவிக்கவே இல்லை. ஆனால், மின்வெட்டு இருந்தது. அது நாளாக ஆக, அதிகரித்துக்கொண்டே போனதால் மறைக்க முடியவில்லை. எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எங்களைப் பொறுத்தவரையில் மோசமான நிலையைச் சீர்செய்திருக்கிறோம். இப்போது ஒரு எச்சரிக்கை உணர்வுடன், நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வாக்குறுதி கொடுத்தது தவறி விடக்கூடாது என்பதற்காக மின்வெட்டு இருக்கும் என்று சொல்கிறோம். ஆனால், மின்வெட்டே இல்லாமல் மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



நான் ஏற்கெனவே அறிவித்ததற்கேற்ப, தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு விரைவில் முழுமையாக நீங்கி, தங்குதடையின்றி அனைத்துத்தரப்பு நுகர்வோர்களுக்கும் மின்சாரம் கிடைக்கப்பெறும். தமிழகத்தின் எதிர்கால மின் தேவையைக் கருத்தில்கொண்டு, பல்வேறு புதிய மின் திட்டங்களை நான் இந்த மாமன்றத்தில் அறிவித்து இருந்தேன். அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

பிற்பகல் 12–05

4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் 660 மெகா வாட் திறன்கொண்ட எண்ணூர் அனல் மின் திட்ட விரிவாக்க அலகிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வுகள் இறுதி நிலையில் உள்ளன. விரைவில் இத்திட்டம் அமைப்பதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் துவங்கும்.

2 x 660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் 8,000 கோடி ரூபாயில் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. இதற்கான ஆணைகளும் விரைவில் வழங்கப்படும்.

இதேபோன்று 2 x 660 மெகா வாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்டமும், நிலக்கரி இறக்கு தளத்துடன் அதாவது Coal Jetty–யுடன் 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. இவையும் விரைவில் இறுதி செய்யப்பட்டு, ஆணைகள் வழங்கி, பணிகள் துவக்க ஆவன செய்யப்படும்.

மேலும், 2 x 800 மெகா வாட் திறன் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம், உப்பூர் புதிய அனல் மின் திட்டத்திற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்ற சட்டமன்றத் தொடரில் நீலகிரி மாவட்டத்தில் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,000 மெகா வாட் திறன் கொண்ட ‘சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம்’ உருவாக்கப்படும் என நான் அறிவித்து இருந்தேன். இதற்கான ஆய்வுப் பணிகள் 22–8–2013 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 25

இது மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொண்டு சென்று மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கத்தக்க வகையில் பல புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் மின் வழித் தடங்கள் அமைக்கப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன்.

5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,572 கோடி ரூபாய் ஜப்பானிய நிதியுதவியுடன் தமிழ்நாட்டின், குறிப்பாக சென்னையின், கட்டமைப்பையும், தொடரமைப்பையும் வலுப்படுத்த ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும், பதினான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அவற்றைச் சார்ந்த மின் தட வழிகளும் அமைக்கப்பட வேண்டும். இவற்றில் ஐந்து 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டுவிட்டன. இரண்டு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும், ஏழு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்குமான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மீதமுள்ள மூன்று 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும், இரண்டு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

இதேபோன்று, 8,000 கோடி ரூபாய் செலவில் 56 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என நான் அறிவித்திருந்தேன். இவற்றுள் 5 துணை மின் நிலையங்கள் சோதனை மின்னோட்டம் செய்யப்பட்டுள்ளன. 24 துணை மின் நிலையங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 துணை மின் நிலையங்களில் பணிகள் துவங்கப்பட உள்ளன. 13 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வில் உள்ளன. 7 துணை மின் நிலையங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

மேலும், பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறத்தக்க வகையில் வேலூர் மாவட்டம், திருவலத்தில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் அதனைச் சார்ந்த 400 கிலோ வோல்ட் மின் வழித் தடங்களுக்குமான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கியுள்ளன.



2013 அக்டோபர் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மையமாகக்கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்கிடவேண்டும் என்ற நோக்கத்தில் 'சூரிய எரிசக்திக் கொள்கை 2012'—ஐ நான் வெளியிட்டிருந்தேன். இதன்படி மூன்று ஆண்டுகளில் சூரியசக்தி மூலம் 3,000 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படவேண்டும். இதனடிப்படையில் முதல் கட்டமாக 1,000 மெகா வாட் அளவிற்கான சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவி, அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும்வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 698 மெகா வாட் அளவிற்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

பிற்பகல் 12—10

"சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்" என்ற பழமொழிக்கேற்ப, நமக்கெல்லாம் மின் உற்பத்தியை, மின் விநியோகத்தை அளித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலைமையைச் சீர்படுத்துவதற்காக எனது தலைமையிலான அரசு பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 31—3—2011 நிலவரப்படி, தமிழ்நாடு மின் வாரியத்தின் மொத்த இழப்பு சுமார் 40,375 கோடி ரூபாயாகும். இந்த இழப்பை ஈடு செய்து தமிழ்நாடு மின் வாரியத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் வகையில், நிதிச் சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி, தமிழ்நாடு மின் வாரியத்தின் குறுகிய காலக் கடன் சுமையில் 50 சதவீதத்தை அரசே ஏற்றுக்கொள்ளும். இந்தச் சீரமைப்புத் திட்டத்தின்படி 6,353.49 கோடி ரூபாய்க்கான மின் வாரியத்தின் நிலுவைக் கடன் தொகைக்கு ஈடான நிதிப் பத்திரங்கள் வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இதன்மீதான அசல் மற்றும் வட்டியினைத் தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும். மேலும், 5,951.43 கோடி ரூபாய் வங்கிக் கடனை மறுசீரமைப்புச் செய்வதற்காக அரசு உத்தரவாதம் வழங்கியுள்ளது. இது தவிர, தமிழ்நாடு மின் வாரியம் கடன் பெற ஏதுவாக 22,700 கோடி ரூபாய் அளவிற்கு அரசு உத்தரவாதத்தை அளித்துள்ளது.

எனது தலைமையிலான தமிழக அரசு, கடந்த 2011—2012 ஆம் ஆண்டில் 7,913.35 கோடி ரூபாயும், 2012—2013 ஆம் ஆண்டில் 11,242 கோடி ரூபாயும் நிதியுதவியாக வழங்கியுள்ளது. 2013—2014 ஆம் ஆண்டிற்கு இதுவரை இருந்திராத அளவாக 12,197 கோடி ரூபாயை

(மேசையைத் தட்டும் ஒலி) நிதியுதவியாக தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் மானியத் தொகை 4,749.90 கோடி ரூபாயை அரசு முன்னதாகவே வழங்கியுள்ளது. மேலும், பங்கு மூலதனமாக 500 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையையே பாழ்படுத்தி, சீர்குலைத்து அது திவாலாகும் அளவிற்கு, இழுத்து மூடவேண்டிய அளவிற்கு ஆக்கிவிட்டு, 45,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட கடனையும் வைத்துவிட்டுச் சென்றார்கள். இப்பொழுதுதான் நான் அந்தத் தொகையை 40,375 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு சென்றார்கள் என்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த நிலைமையை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். இந்தக் கடனை எப்படித் திருப்பிச் செலுத்த முடியும், தமிழக மின் வாரியத்தின் நிதி நிலைமையை எப்படி மீண்டும் சீர்படுத்த முடியும் என்று எல்லோருமே மலைத்துவிட்டார்கள், திகைத்துவிட்டார்கள். நானும் மிகவும் கவலைகொண்டேன். அன்றைய நிலைமையில், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடன் கொடுக்கக்கூடாது என்று இந்தியாவிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவு போட்டுவிட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் இனி தேறவே தேறாது என்று சொல்லி, அவர்கள் முடிவே கட்டிவிட்டார்கள். கடன்கூட கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டார்கள். ஆனால் அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு இன்றைக்குப் படிப்படியாக இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட அந்தக் கடன் முழுவதையும் அடைக்கும் அளவிற்கு தமிழக அரசே பொறுப்பேற்றுக்கொண்டு, அந்தப் பணத்தை மின்சார வாரியத்திற்கு வழங்கி, இன்று மின்சார வாரியத்தைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த வகையிலும் கவலைகொள்ளத் தேவையில்லை. வெகு விரைவில், மிக விரைவில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை சாதித்தே தீருவோம். இதையே கடந்த ஆண்டு சாதித்தே தீருவோம் என்று நான் பேசியபோது எப்படி செய்யப்போகிறார்கள் என்று எல்லோரும் நகைத்தார்கள்.





இப்போது சாதித்தே தீருவோம் என்றால் எல்லோரும் நம்புகிறார்கள் என்றால் கிட்டத்தட்ட 99 சதவிகிதம் சாதித்துவிட்டோம். இன்னும் ஒரு சதவிகிதம்தான், இந்த ஆண்டு இறுதிக்குள் அதையும் சாதித்துவிடுவோம். ஆகவே, நான் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் நமக்குத் தேவையான மின்சாரம் விரைந்து கிடைக்கவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமை மேம்படவும், வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் சிறு, குறு தொழிலாளர்களின் நிலைமை என்னவாகும், சிறு, குறு, தொழில்கள் நடத்துவோரின் நிலைமை என்னவாகும் என்று கவலைகொள்ளத் தேவையில்லை. எல்லோருக்கும் 24 மணி நேரமும் சீரான மின்சாரம் கிடைக்கும்படியான ஒரு சூழ்நிலையை வெகு விரைவில் உருவாக்கிக் காட்டுவோம் என்று தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும்போது சிறு, குறு தொழில்களுக்கு மின்வெட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால், சிறு, குறு தொழில்களுக்கு மின்வெட்டு கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் மின் அழுத்த பெரிய தொழிற்சாலைகளுக்கு இருந்த 40 விழுக்காடு மின்வெட்டும், 1–10–2013–லிருந்து 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரம் குறித்து குறிப்பிட்டார். டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேர மும்முனை மின்சாரம் அளிக்கப்படுவதுடன், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் சராசரியாக 9 மணிநேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 அக்டோபர் 25

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 130 முதல் 149 வரையிலான 20 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*



2013 அக்டோபர் 25]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

[2013 அக்டோபர் 25

## 6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2013–2014, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் தோன்றி நாகரிக மனித குலம் உருவான காலம்தொட்டு, மனித சமுதாயத்தை வழிநடத்தும் தலைவர்களையும், மனிதர்களை நெறிப்படுத்தும் புனிதர்களையும், அறிவார்ந்த இவ்வுலகம் தேர்ந்து, அவர்களைப் புரிந்து, அவர்தம் வழியில் இசைந்து நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இந்த உலகம் இதுவரை கண்ட அத்துணைத் தலைவர்களுக்கும் மேலாக அறிவு, ஆற்றல், அஞ்சாமை, அன்பு, பண்பு, கண்துஞ்சாமை, வாய்மை, தூய்மை, அறிவாண்மை, வேகம், விவேகம், சொல்வண்மை, ஈத்துவக்கும் வள்ளல் தன்மை, ஈரநெஞ்சத்து மனித நேயம், இரக்கம் காட்டும் மனிதாபிமானம், தியாகிர்த்தி, தீர்க்க நோக்கு, தொலைநோக்குச் சிந்தனை என அத்துணை அருங்குணங்களும் ஓர் உருவாகக் கொண்ட ஒப்பற்ற தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி). பொய்க் கோலம் போடுவோரின் முகத்திரை கிழித்து, "ப்பூ" என ஊதித்தள்ளி (மேசையைத் தட்டும் ஒலி) புற முதுகு காட்ட வைக்கும் புதுயுகத்தின் புதுமைத் தலைவராக அறத்தால், மறத்தால், ஆற்றல்மிகு ஆட்சித் திறத்தால் தமிழகத்தைக் கட்டிக்காத்து இன்று தமிழகத்தில் நல்லாட்சி செய்துகொண்டிருக்கும் தன்னிகரற்ற முதல்வராக நாளை உலக நாடுகளில் உயர்ந்த நாடு (மேசையைத் தட்டும் ஒலி) பாரத தேசமே என உலக மக்கள் வியந்து போற்ற நல்லரசு நடத்தி, இந்திய தேசத்தை வல்லரசாக்குவார் நம் அம்மா என்று இந்திய மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் எதிர்பார்க்கும் தனிப்பெரும் தலைவராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பண்பாட்டுச் சிறப்பும், பாரம்பரிய பெருமையும் கொண்ட இந்த மாமன்றத்தில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும் நல்வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.*



2013 அக்டோபர் 25] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*பிற்பகல் 12–20*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். நடப்பு நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் 2013 மார்ச் திங்கள் 21 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு, நிருவாக நலன் கருதியும், மக்களின் நலனைக் கருத்தில்கொண்டும் பல புதுப் பணி மற்றும் புதுத் துணைப் பணித் திட்டங்கள் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதுப் பணி மற்றும் புதுத் துணைப் பணிகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதற்கும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்யும்பொருட்டும், இந்தத் துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.*

*2. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 5,898.19 கோடி ரூபாய் நிதியைக் கூடுதலாக ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இவற்றில், 4,829.67 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1,068.52 கோடி ரூபாய் மூலதன மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும். இம்மதிப்பீடுகளில் உள்ள கூடுதல் செலவினங்கள் மாநில வரி வருவாயின் வளர்ச்சியின் மூலமாகவும், செலவினங்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் ஈடு செய்யப்படும். இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்களைப்பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.*

*3. நமது மாநிலம் கடுமையான வறட்சியைச் சந்திக்க நேரிட்டதை நமது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். வறட்சியைச் சமாளிக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிடவும் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்தது. இந்த நடவடிக்கைகள் காரணமாக, அரசுக்கு ஏற்பட்ட செலவினம் 1,004.86 கோடி ரூபாயாகும். இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.*

---

*@ 195 முதல் 199 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 அக்டோபர் 25

*4.* ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதால், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால், உயர் கல்வி பயிலும் ஆதி திராவிட/பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கான உதவித் தொகையாக, 549 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசால் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏழு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிட/பழங்குடியின மாணவியர்களை, தொடர்ந்து கல்வி பயிலச் செய்து ஊக்குவிப்பதற்காக கூடுதலாக 21.11 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இந்தத் தொகைகள் “மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை” என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 12–25

*5.* 2014 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி வழங்கப்படும் விலையில்லா வேட்டி வேலைகள் வழங்குவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், நூல் விலை உயர்வின் காரணமாக இத்தொகை போதுமானதாக இல்லை என்பதால் கூடுதலாக 136.36 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)” என்பதன்கீழ் 136.36 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

*6.* மாணவ மாணவியருக்குப் பேருந்து பயணக் கட்டணச் சலுகைகள் வழங்குவதால் ஏற்படும் இழப்பீட்டு நிலுவைத் தொகையை, மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடு செய்ய கூடுதலாக 297.60 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் 297.60 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.



2013 அக்டோபர் 25] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*7.* ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இணை உணவளிக்கும் செலவுகளுக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான 190 கோடி ரூபாய்க்கும் மேல் கூடுதலாக, 228.36 கோடி ரூபாய் தேவைப்படுவதால், இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை” என்பதன்கீழ் 228.36 கோடி ரூபாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் சேர்க்கப்பட்டுள்ளது.

*8.* மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவித்தபடி, விவசாயிகளுக்கு சூரிய சக்தியின்மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 80 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை” என்பதன்கீழ் 68 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

*9.* சென்னைக்கு அருகில் நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செலவினங்களுக்காக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு 51.39 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அளித்துள்ளது. இதற்காக, இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” என்பதன்கீழ் 1,000/– ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

*10.* தகுதியுள்ள அனைத்து 2,323 கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும், சமுதாய முதலீட்டு நிதியாக தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு 232.30 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை” என்பதன்கீழ் ஒவ்வொரு இனத்தின்கீழும் 1,000/– ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் மேற்கொள்ளப்படும். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி நெசவாளர்களுக்கு சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டித் தருவதற்காக மாண்புமிகு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 அக்டோபர் 25

அம்மா அவர்களது அரசு 260 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் 260 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

11. காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின்கீழ் தகுதியுள்ள காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை பணியாளர்களுக்கு வீடு கட்ட முன்பணமாக 284.20 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு செய்து வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–30

12. தமிழ்நாடு கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக, ஆந்திரப்பிரதேச மாநில அரசிற்கு 100 கோடி ரூபாய் மூலதன மானியமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் 100 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி, சென்னை மாநகரக் காவலர்களுக்கான உணவுப் படியை நாளொன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகவும், பிற மாவட்டக் காவலர்களுக்கான உணவுப் படியை நாளொன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)" என்பதன்கீழ் 59.65 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

14. இந்திய திரைப்படத் துறையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்காக, தென்னிந்திய திரைப்பட வர்த்தகச்



2013 அக்டோபர் 25] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சங்கத்திற்கு, மானியமாக 10 கோடி ரூபாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)" என்பதன்கீழ் 10 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

15. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை இடித்து மறுகட்டுமானம் செய்வதற்கு 50 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் ரூபாய் 1,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கம்மூலம் செலவிடப்படும்.

16. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான இந்த முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

## 2013–2014 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 13,40 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 2,96,19 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 570,62,83 | 1 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 87,87,34 | 2 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 12,96,51 | 1 | .. |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 6 | 1 | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 78 | 3 | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 16,90 | .. | .. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 76,65 | 1 | .. |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 21,29 | .. | .. |
| 14 | எரிசக்தித் துறை | 3 | .. | 37,50,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,77,00 | 1 | .. |
| 16 | நிதித் துறை | 1 | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 140,11,02 | .. | 25,53,32 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 1,78,00 | 66,25 | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,11,24 | 2 | .. |





| | | | | |
|---|---|---|---|---|
| 20 | உயர் கல்வித் துறை | 15 | 3 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 1 | 2,91,96 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 75,10,06 | 1 | 276,70,21 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,51,79 | .. | 8,71,00 |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 4,52,57 | 1,00,00 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | 1 | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 3 | 1 | .. |
| 27 | தொழில் துறை | 1 | .. | 137,50,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 13,02,75 | 1 | .. |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 12 | 4 | .. |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு— (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 2 | .. | 2 |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 78,99,16 | .. | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 9,04 | 2 | .. |
| 33 | சட்டத் துறை | 5,34,38 | .. | .. |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 49,88 | 3 | 100,00,00 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 28,41 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 1 | .. | .. |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 14 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 1 | 5,00,11 | .. |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 110,18,59 | 1,00,35 | .. |
| 41 | வருவாய்த் துறை | 14,93,29 | .. | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 23,18,53 | 440,03,38 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 100,57,29 | .. | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 2,00,01 | .. | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 240,23,31 | .. | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 60,03 | .. | .. |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 5,00,00 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 297,60,01 | .. | 24,39,50 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 56,32,04 | .. | .. |





| | | | | |
|---|---|---|---|---|
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2,84,74 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,458,73,04 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 4,00,10 | .. | .. |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,500,00,00 | .. | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,10,52 | 2,81,06 | .. |
| | **பெருமொத்தம்** | **4,823,19,32** | **453,43,41** | **610,34,03** |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை, (28–10–2013) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*4. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*5. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*6.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. *(2013–2014)*

*7.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*8.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. *(2013–2014)*

*9.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*10.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. *(2013–2014)*

*11.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2013–2014)*

*12.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. *(2013–2014)*

*13.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. *(2013–2014)*

*14.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. *(2013–2014)*

*15.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2013–2014)*

*16.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. *(2013–2014)*

*17.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*18.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. *(2013–2014)*

*19.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது அறிக்கை. *(2013–2014)*

*20.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது





அறிக்கை. *(2013–2014)*

*21.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2013–2014)*

*22.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஆறாவது அறிக்கை. *(2013–2014)*

*23.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஏழாவது அறிக்கை. *(2013–2014)*

*24.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து எட்டாவது அறிக்கை. *(2013–2014)*

*25.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2013–2014)*

* * * * *